ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2378 - 2024 මාර්තු මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.03.28

*2378 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 832 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 870 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

829-B 82554-5,441 (2024/03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரசகரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ்

### உப பொலிஸ் பரிசோதகர் பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம். இல. 375, 01 ஆம் மாடி ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை கொழும்பு - 06" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிப்பெயரினை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2024.04.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

03. **சம்பள அளவுத் திட்டம்** -

ரூபா 32,790.00 - 7 × 370 - 2 × 495 – 25 × 660 - ரூபா 52,870.00

இந்த வேதனக் கொடுப்பனவானது பொ.நி. சுற்றுநிருப இல. 03/2016 இன் படி மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இவ் உத்தியோகத்தர்களுக்கு 2022.12.15 ஆம் திகதிய CRTM 260 RTM 385 இன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் சகல கொடுப்பனவுகளும் உரித்தானது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவிற்கு மேலதிகமாக இங்கு கீழ் வரும் கொடுப்பனவுகள் இவர்களுக்கு மாதாந்தம் கிடைக்கப்பெற உரித்தானது.

| | |
|---|---|
| (அ) வாழ்கைச் செலவுக் கொடுப்பனவு :- | ரூபா 12,800.00 |
| (ஆ) ஆரம்ப சம்பளத்தில் 40% கொடுப்பனவு | ரூபா 13,116.00 |
| (இ) கடினக் கொடுப்பனவு | ரூபா 2,000.00 |
| (ஈ) இடைக்கால கொடுப்பனவு :- | ரூபா 7,500.00 |
| (உ) சீருடைகளை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு | ரூபா 250.00 |
| (ஊ) உணவு மற்றும் தங்குமிடம் கொடுப்பனவு | ரூபா 31,800.00 |
| (எ) வேறு கொடுப்பனவுகள் சேவைக் காலத்திற்கேற்ப | |

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக

(அ) இலவச போக்குவரத்து
(ஆ) உத்தியோகத்தர்களுக்கான இலவச வைத்திய வசதி (வெளிநாட்டில் சிகிச்சை பெற நிதி உதவி பெற்றுக்கொள்ள முடியும்)
(இ) சீருடை அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்
(ஈ) தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளை கற்க சந்தர்ப்பம் அளிக்கப்படும்.
(உ) உங்களது விளையாட்டுத் திறமை மற்றும் ஏனைய திறமைகளை விருத்தி செய்வதற்கான வசதிகள்
(ஊ) கடமைக்கு செல்வதற்கான கட்டணம் மற்றும் கஷ்டப் பிரதேசக் கடமைக்கானதும் விஷேட கடமைக்கான வெகுமதியாக பணம் பரிசுகளும் வழங்கப்படும்.

04. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

4.1 **வயதெல்லை :**

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 28 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

4.2 **கல்வித் தகைமைகள் :**

❖ க.பொ.த. (சா.தர.) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன்:

❖ க.பொ.த. (உ.தர.) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 01** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின் படி பாட எண் 41,44 விஞ்ஞான பாடங்கள் என்பன ஒரே பாடமாகவும் எண் 42 மற்றும் 45 கணித பாடங்கள் ஒரே பாடமாகவும் கவனிக்கப்பட்டு பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 02** க.பொ.த. (சா./ த.) பரீட்சையில் கணினிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது அப்பாடத்தில் செய்முறைப்பரீட்சையில் சித்தியெய்தியிருப்பின் அப்பாடத்தில் சித்தி அடையாததாகவே கருதப்படும்.

**குறிப்பு 03** வேறு தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள பாடங்கள் க.பொ.த. (சா./ த.) பரீட்சை அட்டவணைக்குட் படாமையினால் அப்பாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் க.பொ.த. (சா./ த.) பரீட்சையில் சித்தியடைந்த தாகக் கருதப்படமாட்டாது.

4.3 **பௌதீகத் தகைமைகள் :**

- உயரம் : 05 அடி 06 அங்குலம் (167.64 cm) (ஆகக் குறைந்தது)
- மார்பு : 32 அங்குலம் (81.28 cm) (ஆகக் குறைந்தது மூச்சுவிட்ட நிலையில்)

4.3.1 ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் கடமையாற்றவும் பதவியின் கடமையினை நிறைவேற்றவும் போதியளவு மனத்தைரியமும் உடலுறுதியும் இருத்தல் வேண்டும்.

4.3.2 கட் புல தொழிற்பாடு – மூக்குக் கண்ணாடி ஒரு சோடி அல்லது கண் வில்லை இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தளவு பார்வை 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும்.ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும் போது மற்றைய கண்ணானது 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.3.3 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருந்தாத மற்றும் கடமைக்குத் தடையான வகையில் அறுவைச் சிகிச்சை மூலம் உடலுறுப்புக்கள் பொருத்தப்பட்ட ஊனமுற்றவராக அல்லாதிருத்தல் வேண்டும்.

4.4 **வேறு தகுதிகள் -**

4.4.1 இலங்கைப் பிரைசயாகவிருத்தல் வேண்டும்.

4.4.2 விண்ணப்பதாரி குற்றச்செயல்களில் ஈடுபடாத ஒழுக்கமானவராக இருத்தல் வேண்டும்.

4.4.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் அற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

4.4.4 நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.

4.4.5 பதவிக்கு சேர்வதற்கு தேவையான 4:1, 4:2 ஆகிய தகுதிகளை விண்ணப்பப் படிவம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் 4:4 இல் கோரப்பட்டுள்ள தகுதிகள் சேர்த்துக் கொள்ளப்படும் தினத்தன்று அவ்வாறே இருத்தல் வேண்டும்.

05. **ஆரம்ப பரீட்சை .-**

விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் அடிப்படைத் தகுதிகளையும் வயதெல்லையையும் பூரணப் படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே ஆரம்ப பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப் பரீட்சையில் பந்தி 4:1, 4.2 மற்றும் 4.3 (4:3:1 மற்றும் 4:3:2 தவிர்ந்த ) தகுதிகள் பரிசீலிக்கப்படும்.

ஆரம்ப பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் தேகாரோக்கிய பரிசோதனைக்கு சமுகமாதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரிசோதனையின் போது அதற்கு முகம் கொடுக்கத் தகுதியானவர்கள் என அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பம் இலங்கை வைத்திய சபையில் பதிவு பெற்ற வைத்தியரின் சிபாரிசுக் கடிதத்துடன் அவ்வேளையிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| செயற்பாடு | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| ஓட்டத் தூரம் / Run meters 1000 மீற்றர் | 03 நிமிடங்களிற்கு குறைவாயின் | 30 |
| | 03-04 நிமிடங்களிற்கிடையில் | 20 |
| | 04-05 நிமிடங்களிற்கிடையில் | 10 |
| Chinup (05 தடவைகள்) | 01 நிமிடம் | ஒருதடவைக்கு 03 புள்ளிகள் படி ஆகக்கூடியது 15 புள்ளிகள் |

| செயற்பாடு | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Situp (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Kim Gem (ஞாபக சக்தியை பரிசோதித்தல் | தேர்வுசெய்த வகைச் செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்கு 30 நொடிகள் ஞாபக சக்திக்கு 30 நொடிகள் எழுத்துக்கு 120 நொடிகள் | ஒரு செயலிற்கு 01 புள்ளிப் படி ஆகக்கூடியது 10 புள்ளிகள் |

**குறிப்பு**.- 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர்.

06. **எழுத்துப் பரீட்சை** .- ஆரம்ப பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சை கீழ் வரும் பாடங்களில் இடம் பெறும்.

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | காலம் | சித்தியடையத் தேவையான புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 01. புரிந்துணர்வு மற்றும் மொழித்தேர்ச்சி | 40 | 45 நிமிடம் | 40% |
| 02. பொது அறிவும் புத்தி கூர்மைக்கான பரீட்சை | 60 | 1 மணித்தியாலம் | |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**.- ஆரம்ப பரீட்சையிலும் எழுத்துப் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | தேர்ந்தெடுக்க கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகளின் தொகை |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித்தகைமைகள் | 20 | தேவையற்றது |
| 2. மொழித் தகைமைகள் | 10 | |
| 3. கணினி திறமை | 10 | |
| 4. விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| 5. தலைமைத்துவம்/பொது சேவைகள் | 20 | |
| 6. நேர்முகப் பரீட்சை சபையின் பாராட்டு | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **இணைத்துக்கொள்ளப்படும் முறை**.- எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகண முறைப்படி பட்டியல் தயாரிக்கப்படும். அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன் படி வெற்றிட எண்ணிக்கையின் 125% விண்ணப்பதாரிகள் கணக்கெடுத்து பின்னணிப் பரீட்சைக்கும் மற்றும் வைத்திய பரீட்சைக்கும் அழைக்கப்பட்டு அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மூலம் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவிகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**குறிப்பு**.- மேற்படி திட்டத்திற்கு புறம்பாக உள்ளூர், சர்வதேச மட்டத்தில் தேசிய மட்டத்தில் அல்லது விஷேட விளையாட்டுத் திறமையினைப் பெற்றுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான அல்லது திறமையினை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் மற்றும் மார்பளவு சம்பந்தமான தகைமைகள் கவனத்தில் கொள்ளாது ஏனைய தகுதிகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட தேர்வு அதிகாரியின் தீர்மானத்திற்கமைய இணைத்துக்கொள்ளப்படுவார்.

09. **பின்னணிப் பரீட்சை**.-

9.1 எழுத்துப் பரீட்சையிலும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகண முறைப்படி தயாரிக்கப்பட்டு அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன் படி வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளுக்கு ஏதேனும் பாதகமான அறிக்கைகள் உண்டா என்பது சம்பந்தமாக பின்னணிப் பரீட்சை மேற்கொள்ளப்படும்.

9.2 இங்கு விண்ணப்பதாரியின் பாதகமான அறிக்கைகள் உறுதிப்படுத்திக் கொள்ள அவரும் அவரது நெருங்கிய உறவினர்கள் அவருடன் நெருங்கிப் பழகியவர்களதும் பாதகமான அறிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யப்படும் என்பதுடன் பாதகமான அறிக்கைகள் உடைய விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

9.3 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குதல் அவர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதியன்று. பொய்யான தகவல்களை வழங்கியமை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எந்த வேளையிலும் அவர்கள் சேவையிலிருந்து அகற்றப்படுவார்கள்.

**குறிப்பு**.- நடைமுறை விதிகளின் பிரிவு 59 மற்றும் தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் 7:2:4:5:2 பிரிவுகள் மற்றும் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை 2014/2007 இற்கு அமைய நீங்கள் பொய்யான தகவல்களை வழங்கி பொலிஸ் சேவைக்கு இணைக்கப்பட்டது தெரிய வந்தால் நீங்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவீர்கள் என்னும் தீர்மானத்திற்கு உடன்படல் வேண்டும்.

10. **வைத்தியப் பரிசோதனை**.- வைத்திய பரிசோதனைக்கு அழைக்கப்படுபவர். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள், பொலிஸ் வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரியுள்ளிட்ட வைத்திய சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இங்கு விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைக்கு தகுதியானவரென உடற்தேர்வு மற்றும் மனநல சௌக்கியம் சம்பந்தமான பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சைக்கு ஒரு தரம் மட்டுமே உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சை சுகாதார பத்திரம் 169 இற்கமைய மேற்கொள்ளப்படும். வைத்திய சபையினால் நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்ய முடியாது.

11. **பயிற்சி**.-

11.1 மேற்படி பரீட்சைகள் அனைத்திலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள் மட்டுமே காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் தினத்தில் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்படுவதுடன் அதன் பின்னர் கட்டாய சேவைப் பயிற்சிக் காலம் நிறைவடையும் வரை அத்துறைக்குரிய பயிற்சி வழங்கப்படும்.

11.2 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனம் இரத்துச் செய்தல் என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

12. **பதவியின் தன்மை**.- நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும். (ஓய்வூதிய வேதன முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.)

13. **சேவை நிபந்தனைகள்**.-

13.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் கீழ்குறித்த 13 : 3 பிரிவிற்கு கீழ்பட்டு மூன்று (03) வருடங்கள் பயிலுநர் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அரசகரும மொழிக் கொள்கையினை செயற்படுத்திட தற்போதைய அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் அது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்ட ஏதேனும் கட்டளையின் மீது அதற்கு அனுகூலமாக செயற்படல் வேண்டும்.

13.3 பொது சேவை ஆணைக்குழுவின் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு சுற்று நிருபம், தாபனக் கோவை ஒழுங்குப்படுத்தல் நிதி ஒழுங்கு விதிகள், அரச நிர்வாக சுற்று நிருபங்கள் திறைசேரி சுற்று நிருபம், இலங்கைப்

பொலிஸ் கட்டளை, பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல், பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபம், பொலிஸ் ஆலோசனை சட்டங்களின் ஒழுங்கு விதிகள் மற்றும் நியமனக் கடிதத்திலுள்ள நிபந்னைகளிற்குக் கட்டுப்படல் வேண்டும்.

13.4 பயிலுநர் சேவைக் காலமானது நியமனத் திகதியிலிருந்து முதல் 03 வருடங்கள் வலுவில் இருப்பதுடன் அக்காலத்திற்குள் உத்தியோகத்தர்களுக்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. திருமணம் முடிக்க முடியுமானது பொலிஸ் சுற்று நிருபங்களில் வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளின் பிரகாரம் மட்டுமே. இந்த ஒழுங்கு விதிகள் மீறப்படும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

13.5 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நிறைவின் பின்னர் 05 வருடங்கள் கட்டாய சேவையினை மேற்கொள்ளல் வேண்டும். இந்த கட்டாய சேவைக் காலத்தை நிறைவு செய்யும் முன்னர் எவரேனும் ஏதேனும் பதவியிலிருந்து சுயமாக விலகிட முற்படுவாராயின் அவருக்கான பயிற்சிகள் மற்றும் சீருடையுள்ளிட்ட ஏனைய செலவுகளுக்காக தீர்மானிக்கப்படும் தொகை அனைத்தும் விலகிச் செல்வதற்கான கடிதத்தினை கையளிக்கும் போதே செலுத்தும் விருப்பத்தை தெரிவிக்கும் ஒப்பந்தத்திற்கு வருதல் வேண்டும். விலகிச் செல்வது சம்பந்தமாக திணைக்கள கட்டளை ஒழுங்கு விதிகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும்/ பொதுச் சேவை ஆணைக் குழுவின் சுற்று நிருப ஒழுங்குவிதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13.6 நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் பொலிஸ் சேவையில் முதல் தடவையாக இணைத்துக் கொள்ளப்படும் போது தன்னிடமிருக்கும் சொந்தச் சொத்துக்கள் அல்லது பெயரில் எழுதப்பட்ட அல்லது சட்டரீதியாக பாரமளிக்கப்பட்ட அல்லது எல்லாவிதமான சொத்துக்கள் சம்பந்தமாகவும் தன்னிடமுள்ள பொறுப்புக்கள் சம்பந்தமான விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்வாங்க (திருத்தப்பட்ட) இலக்கம் 261 எனும் பொதுப் படிவத்தில் பதிவிட்டு பொலிஸ் மா அதிபருக்கு அனுப்புதல் வேண்டும்.

உத்தியோகத்தர் திருமணம் முடித்தவுடன் மேற்கூறப்பட்ட விபரங்களையும் மனைவியினது விபரங்களையும் உள்ளடக்கி வழங்குதல் வேண்டும்.

மேலே விபரிக்கப்பட்டவாறு புதிய உரித்து அல்லது சொத்து கிடைக்கப்பெற்றால் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட உரித்து அல்லது சொத்து சம்பந்தமாகவும் முழு விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க ஒவ்வொரு உத்தியோகத்தரும் எழுத்து மூலமாக பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்தல் வேண்டும்.

13.7 தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைவாக செயற்படுவேன் என்று உறுதிகூறி சத்தியப்பிரமாணம் கொடுத்தல் வேண்டும்.

14. **நியமனம் நிரந்தரமாக்கல்.**- நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் 03 வருட தகுதிகாண் சேவைக் காலத்துடன் பயிற்சி முன்னேற்ற அறிக்கை 33 மாத்திற்கு நீடிக்கும். தகுதிகாண் முடிவில் உத்தியோகத்தர்களின் தொழில் தருநரினால் நிரந்தர நியமனம் வழங்கப்படும். பயிலுநர் சேவை காலத்தில் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் உத்தியோகத்தரின் முதுநிலையானது மேலதிக கால அடிப்படையில் நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பட்டு சேவை நிரந்தரமாக்கப்படும்.

அப்படியானாலும் மேலதிக 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய தவறும் உத்தியோகத்தர்களினது நியமனம் நிரந்தரமாக்குதல் அல்லது பயிலுநர் காலத்தை நீடிப்பது சம்பந்தமாக நியமனம் வழங்கும் அதிகாரம் பெற்றவர் தீர்மானித்தாலன்றி நியமனம் முடிவுறுத்தப்படும்.

15. **வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை.**-

வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை நடைமுறைப்படுத்தல் கீழ் வருமாறாகும்:-

| *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை விபரம்* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டியது எத்தனை வருட காலத்திற்கு முன்னர்* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை தன்மை எழுத்து பரீட்சை தொழில் பரீட்சை/ சன்றிதழ் பாடநெறி /வேறு* |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை) | உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செய்முறை மற்றும் வாய்மொழி |

| வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை விபரம் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டியது எத்தனை வருட காலத்திற்கு முன்னர் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை தன்மை எழுத்து பரீட்சை தொழில் பரீட்சை/ சன்றிதழ் பாடநெறி /வேறு |
|---|---|---|
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் பரிசோதகர் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |

16. **மொழிப் புலமை.-**

| மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய புலமை |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய அரசகரும மொழித் திறனை நன்னடத்தைக் காலத்திற்குள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| ஏனைய அரசகரும மொழிகள் | அரசாங்க நிர்வாக சுற்று நிருபம் 18/2020 மற்றும் அதற்கு துணையான சுற்று நிருபப் படி உரிய மட்டத்திற்கான திறனை பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

17. (அ) இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளுக்கு நியமனம் செய்தல் சம்பந்தமாக உரியதான பொது நிபந்தனை பாதிக்கும்.

18. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் கடிதக் கோவைகளின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (மூலப் பிரதிகளை சமர்ப்பித்தலாகாது)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;
(இ) கல்வித் தகைமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்.

19. (அ) தற்சமயம் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பத்தை உரிய நிறுவனத்தின் பிரதானி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரை விடுவிக்க முடியுமென்ற சான்றிதழை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை 11 × 8 அங்குல அளவான வெள்ளைத் தாளில் தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி உரிய உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்ப் பிரதிகளுடன் மேலே இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் எந்தவிதமான காரணத்தினாலும் அது எவரேனும் உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட ரீதியில் பாரம் கொடுத்தலாகாது.

**குறிப்பு** - மேலும் இவ் விண்ணப்பப்படிவத்திற்கு மேலதிகமாக நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை (Online application) பூர்த்தி செய்வதற்கு www.police.lk என்ற இணையத்தளத்தில் உள்ள "join us" ஐ கிளிக் click செய்வதுடன் அல்லது www.public.police.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை அனுப்பப்படல் வேண்டும்.

20. இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லாவகையிலும் உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரிசீலனை மற்றும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளிற்கு போக்குவரத்துச் செலவோ அல்லது ஏனைய செலவுகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.

தேசபந்து தென்னக்கோன்,
பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர்

| காரியாலய உபயோகத்திற்கு<br>2" × 2 1/2" அளவு |
|---|

1. (அ) முழுப் பெயர் (தமிழில்) :..........................................................................................
..........................................................................................
(தெளிவாகப் பெரிய எழுத்துக்களில்) பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறு இருத்தல் வேண்டும்.

(i) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்)

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) தமிழில்:

(ii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்)

(இ) விண்ணப்பிக்கும் பதவி :..........................................................................................

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :.......................................................... (தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற் பிரதியை இணைத்து அனுப்பவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :..........................................................................................

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :..........................................................................................

பிறந்த இடத்திற்கான பிரதேச செயலகம் :............................................ மாகாணம் :..............................................................

5. (அ) தற்போதைய முகவரி (தமிழில்) :..........................................................................................

(i) தற்போதைய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்)

(ஆ) தற்போதைய முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு :..........................................................................................

(இ) நிரந்தர முகவரி தமிழில் :..........................................................................................

(ii) தற்போதைய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்)

(ஈ) நிரந்தர முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு : ..........................................................................................

(உ) கடிதங்கள் பரிமாறப்படவேண்டிய முகவரி :..........................................................................................

(ஊ) நிரந்தர முகவரிக்கான கிராம அலுவலர் பிரிவு :..........................................................................................
பிரதேச செயலகம் :..........................................................................................

(எ) தொலைபேசி இலக்கம் வீடு :................................................ நடமாடும் :..........................................................................................

(ஏ) மின்னஞ்சல் விலாசம் :............................................. வாட்ஸ் அப் இல. :..........................................................................................

7. பிறந்த திகதி :............................ (பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
வயது (வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்ப முடிவுத் திகதியன்று)

8. உயரம் : ................................ அடி ...................... அங்குலம் மார்பளவு : ............................ அங்குலம்
உயரம் : சென்டிமீற்றர் :................................ மார்பளவு சென்டிமீற்றர் : ............................

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகளைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :........................
......................................................................................................................................................

(அ) க. பொ. த. சா./தர பரீட்சை பெறுபேறு

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஆ) க. பொ. த. உயர்/தர பரீட்சை பெறுபேறு

| துறை | பாடங்கள் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| Z Score | | |

10. எழுத்துப் பரீட்சைக்கு தோன்றும் ஊடக மொழி :.................................................................

11. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :..................................................................

12. (அ)தற்சமயம் செய்யும் தொழில் :.................................................................

(ஆ)நீர் ஆயுதப்படை உறுப்பினரா ? :.................................................................

13. நீர் இதற்கு முன்னர் இலங்கைப் பொலிஸ் சேவையில் இருந்துள்ளீரா? ..........................................................................
பதவி/சீருடை இலக்கம் :.........................................................................................................................
அவ்வாறாயின், நீர் அப்பதவியிலிருந்து விலகியமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக :..............................................................

14. (அ) நீர் ஆயுதப்படையில்/தொண்டர் படையில் இணைந்து சேவை செய்கின்றீரா ? அவ்வாறாயின், விண்ணப்பத்தை உரிய படைத்தள பிரதானி ஊடாக சமர்ப்பிக்கவும் :.........................................................................................................

(ஆ) நீர் ஆயுதப்படையில்/ ஆயுத தொண்டர் படையில் சேவை செய்துள்ளீரா ? அவ்வாறாயின், விலகியபோது வழங்கப்பட்ட அச்சான்றிதழ் நிழற் பிரதியை இணைக்கவும் :.........................................................................................................

15. நீர் ஏதேனும் குற்றத்திற்காகவோ அல்லது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளீரா ? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? (அவ்வாறாயின், விபரத்தைக் குறிப்பிடவும்) :.........................................................................................

16. உமது உறவினர் எவரேனும் ஒருவர் ஏதேனும் குற்றத்திற்காக அல்லது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனரா? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளனரா? (அவ்வாறாயின், விபரத்தை குறிப்பிடவும்) :.........................................................................................................
மேற்படி விடயங்கள் என் அறிவிற்கெட்டிய படியும் நம்பிக்கைப் படியும் உண்மையானதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

அத்துடன் மேற்படி தகவல்கள் பிழையானது அல்லது பொய்யானவை என்று தெரியவந்தால் நான் சேவையில் இணைப்பட்டிருந்தாலும் எவ்வேளையிலும் இலங்கைப் பொலிஸ் சேவையை உடனடியாக இடை நிறுத்த கீழ்படிய வேண்டும் என்பதை அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :...............................

17. நிறுவனப் பிரதானியின் அறிக்கை (உரிய பெயர் மட்டும்) :

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ...................................... அவர்கள் ................................................ திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் என்றும் அவர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென்று தெரிவிக்கின்றேன்.

.................,
நிறுவனப் பிரதானியின் கையொப்பமும்
அதிகாரபூர்வ முத்திரையும்.

பதவி :............................
திகதி :............................

**குறிப்பு** - மேலும் இவ் விண்ணப்பப்படிவத்திற்கு மேலதிகமாக நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை (Online application) பூர்த்தி செய்வதற்கு www.police.lk என்ற இணையத்தளத்தில் உள்ள "join us" ஐ கிளிக் click செய்வதுடன் அல்லது www.public.police.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் வேண்டும்.

03-433/1

---

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கைப் பொலிஸில் பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழே காணப்படும் மாதிரி விண்ணப் படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து “பணிப்பாளர், பயிலுனர் ஆடசேர்ப்புப் பகுதி, இலக்கம் 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு-06” எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு அதனை பதிவுத் தபாலில் 2024.04.30 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸால் விண்ணப்பப்படிவங்கள் வினியோகிக்கப்படமாட்டாது.

03. **வேதன முறைமை-மாதாந்தம்** : ரூபா 29,540 - 7 × 300 - 27 × 370 - ரூபா 41,630

இந்த வேதனக் கொடுப்பனவானது பொ.நி. சுற்று நிருப இல. 03/2016 இன்படி மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இவ் உத்தியோகத்தர்களுக்கு 2022.12.15 ஆம் திகதிய CRTM 260 RTM 385 இன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் சகல கொடுப்பனவுகளும் உரித்தானது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவிற்கு மேலதிகமாக இங்கு கீழ்வரும் கொடுப்பனவுகள் இவர்களுக்கு மாதாந்தம் கிடைக்கப்பெற உரித்தானது.

(அ) வாழ்வாதாரச் செலவுக் கொடுப்பனவு - ரூபா 12,800.00
(ஆ) பொ. நி. சுற்று நிருப இல. 03/2016 இன்படி பதவிக்கேற்ப 40% கொடுப்பனவு - ரூபா 11,816.00
(இ) கஷ்டப்பிதேச சலுகைக் கொடுப்பனவு - ரூபா 2000.00
(ஈ) உள்ளக இடைக்காலக் கொடுப்பனவு - ரூபா 7500.00
(உ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00
(ஊ) உணவு மற்றும் தங்குமிடம் கொடுப்பனவு - ரூபா 28,800.00
(எ) வேறு கொடுப்பனவுகள் சேவைக்கேற்ப

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச வைத்திய வசதி (வெளிநாட்டில் சிகிச்சை பெற நிதி உதவிப் பெற்றுக்கொள்ள முடியும்) ;

(இ) சீருடை அனைத்தும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு அரச பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகளை கற்க சந்தர்ப்பம் அளிக்கப்படும் ;

(உ) உங்களது விளையாட்டுத் திறமை மற்றும் ஏனைய திறமைகளை விருத்தி செய்வதற்கான வசதிகள் ;

(ஊ) கடமைக்கு செல்வதற்கான கட்டணம் மற்றும் கஷ்டப் பிதேசக் கடமைக்கானதும் விஷேட கடமைக்கான வெகுமதியாக பணப்பரிசுகளும் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

4.1 **வயதெல்லை:** வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது 18 - 25 க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4.2 **கல்வித் தகைமைகள்:**
க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஊடக மொழியில் திறமைச் சித்தியுடன் விண்ணப்பதாரி ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியெய்தியிருப்பதுடன் திறமைச் சித்தி 04 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். மேலும் கணிதப் பாடத்தில் இரு தடவைக்கு மேற்படாத தவணையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின்படி பாட எண் 41, 44 விஞ்ஞான பாடங்கள் என்பன ஒரே பாடமாகவும் எண் 42 மற்றும் 45 கணித பாடங்கள் ஒரே பாடமாகவும் கவனிக்கப்பட்டு பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**- க.பொ.த. (சா./ த.) பரீட்சையில் கணினிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது அப்பாடத்தில் செய்முறைப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பின் அப்பாடத்தில் சித்தி அடையாததாகவே கருதப்படும்.

**குறிப்பு 3**- வேறு தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள பாடங்கள் க.பொ.த. (சா./த.) பரீட்சை அட்டவணைக்குட்படாமையினால் அப்பாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் க.பொ.த. (சா./ த.) பரீட்சையில் சித்தியடைந்ததாகக் கருதப்படமாட்டாது.

4.3 **உடற்தோற்றம் :**

* உயரம் : 05 அடி 04 அங்குலம் 162.5 சென்றிமீட்டர் (குறைந்தது)
மார்பளவு : 30 அங்குலம் 76 சென்றிமீட்டர் (குறைந்தது மூச்சுக்காற்று அற்ற)

4.3.1 ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் கடமையாற்றவும் பதவியின் கடமையினை நிறைவேற்றவும் போதியளவு மனதைரியமும் உடலுறுதியும் இருத்தல் வேண்டும்.

4.3.2 **கட்புல தொழிற்பாடு**.- மூக்குக் கண்ணாடி ஒரு சோடி அல்லது கண்வில்லை இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தளவு பார்வை 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும் போது மற்றைய கண்ணானது 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.3.3 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருந்தாத மற்றும் கடமைக்குத் தடையான வகையில் அறுவைச் சிகிச்சை மூலம் உடலுறுப்புக்கள் பொருத்தப்பட்ட ஊனமுற்றவராக அல்லாதிருத்தல் வேண்டும்.

4.4 **வேறு தகுதிகள் :**

4.4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

4.4.2 விண்ணப்பதாரி குற்றச்செயல்களில் ஈடுபடாத ஒழுக்கமானவராக இருத்தல் வேண்டும்;

4.4.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் அற்றவர்களாக இருத்தல் வேண்டும்.)

4.4.4 நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்;

4.4.5 பதவிக்கு சேர்வதற்கு தேவையான 4:1, 4:2 ஆகிய தகுதிகளை விண்ணப்பப் படிவம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் 4 : 4 இல் கோரப்பட்டுள்ள தகுதிகள் சேர்த்துக் கொள்ளப்படும் தினத்தன்று அவ்வாறே இருத்தல் வேண்டும்.

5. **ஆரம்ப பரீட்சை**.- விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் அடிப்படைத் தகுதிகளையும் வயதெல்லையையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே ஆரம்ப பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப்பரீட்சையில் பந்தி 4:1, 4:2 மற்றும் 4.3 (4:3:1 மற்றும் 4:3:2 தவிர்ந்த) தகுதிகள் பரிசீலிக்கப்படும்.

ஆரம்ப பரீட்சைக்கு சமூகமளிக்கும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் தேகாரோக்கிய பரிசோதனைக்கு சமூகமாதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரிசோதனையின் போது அதற்கு முகம் கொடுக்க தகுதியானவர்கள் என அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பம் இலங்கை வைத்திய சபையில் பதிவு பெற்ற வைத்தியரின் சிபாரிசுக் கடிதத்துடன் அவ்வேளையிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| செயற்பாடு | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| ஓட்ட தூரம் / Run meters 1000 மீற்றர் | 03 நிமிடங்களிற்குக் குறைவாயின் | 30 |
| | 03-04 நிமிடங்களிற்கிடையில் | 20 |
| | 04-05 நிமிடங்களிற்கிடையில் | 10 |
| Chinup (05 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 03 புள்ளிகள் படி ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Situp (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Kim Gem (ஞாபக சக்தியை பரிசோதித்தல்) | தேர்வுசெய்த வகைச் செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்கு 30 நொடிகள், ஞாபக சக்திக்கு 30 நொடிகள், எழுத்துக்கு 120 நொடிகள் | ஒரு செயலிற்கு 01 புள்ளிப் படி ஆகக்கூடியது 10 புள்ளிகள் |

**குறிப்பு**.- 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர்.

06. **எழுத்துப் பரீட்சை**.- ஆரம்ப பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சை கீழ்வரும் பாடங்களில் இடம்பெறும்.

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | சித்தியடையத் தேவையான புள்ளி விகிதம் |
|---|---|---|
| 01. புரிந்துணர்வு மற்றும் மொழித்தேர்ச்சி | 50 | 40% |
| 02. பொது அறிவும் புத்தி கூர்மைக்கான பரீட்சை | 50 | |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**: ஆரம்ப பரீட்சையிலும் எழுத்துப் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | தேர்ந்தெடுக்க கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகளின் தொகை |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித்தகைமைகள் | 15 | தேவையற்றது |
| 2. தொழில் தகைமைகள் | 15 | |
| 3. மொழித் தகைமைகள் | 10 | |
| 4. விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| 5. தலைமைத்துவம்/பொது சேவைகள் | 20 | |
| 6. நேர்முகப் பரீட்சை சபையின் பாராட்டு | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **இணைத்துக்கொள்ளப்படும் முறை**: எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகண முறைப்படி பட்டியல் தயாரிக்கப்படும். அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன் படி வெற்றிட எண்ணிக்கையின் 125% விண்ணப்பதாரிகள் கணக்கெடுத்து பின்னணிப் பரீட்சைக்கும் மற்றும் வைத்திய பரீட்சைக்கும் அழைக்கப்பட்டு அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மூலம் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவிகளிற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**குறிப்பு**.- மேற்படி திட்டத்திற்கு புறம்பாக உள்ளூர், சர்வதேச மட்டத்தில் தேசிய மட்டத்தில் அல்லது விஷேட விளையாட்டுத் திறமையினைப் பெற்றுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான அல்லது திறமையினை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் மற்றும் மார்பளவு சம்பந்தமான தகைமைகள் கவனத்தில் கொள்ளாது ஏனைய தகுதிகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட தேர்வு அதிகாரியின் தீர்மானத்திற்கமைய இணைத்துக்கொள்ளப்படுவார்.

09. **பின்னணிப் பரீட்சை** எழுத்துப் பரீட்சையிலும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகணப்படி தயாரிக்கப்பட்டு அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன்படி வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் விண்ணபத் தாரிகளுக்கு ஏதேனும் பாதகமான அறிக்கைகள் உண்டா சம்பந்தமான சம்பந்தமாக பின்னணிப் பரீட்சை மேற்கொள்ளப்படும்.

9.1 இங்கு விண்ணப்பதாரியின் பாதகமான அறிக்கைகள் உறுதிப்படுத்திக் கொள்ள அவரும் அவரது நெருங்கிய உறவினர்கள் அவருடன் நெருங்கிப் பழகியவர்களதும் பாதகமான அறிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யப்படும் என்பதுடன் பாதகமான அறிக்கைகள் உடைய விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

9.2 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குதல் அவர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதியன்று. பொய்யான தகவல்களை வழங்கியமை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எந்த வேளையிலும் அவர்கள் சேவையிலிருந்து அகற்றப்படுவார்.

**குறிப்பு.**- நடைமுறை விதிகளின் பிரிவு 59 மற்றும் தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம்7:2:4:5:2 பிரிவுகள் மற்றும் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை 2014/ 2007 இற்கு அமைய நீங்கள் பொய்யான தகவல்களை வழங்கி பொலிஸ் சேவைக்கு இணைக்கப்பட்டது தெரிய வந்தால் நீங்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவீர்கள் என்று எட்டப்படும் தீர்மானத்திற்கு உடன்படல் வேண்டும்.

10. **வைத்தியப் பரிசோதனை:** வைத்திய பரிசோதனைக்கு அழைக்கப்படுவர். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள். பொலிஸ் வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரியுள்ளிட்ட வைத்திய சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இங்கு விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைக்கு தகுதியானவரென உடற்தேர்வு மற்றும் மனநல சௌக்கியம் சம்பந்தமான பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சைக்கு ஒரு தரம் மட்டுமே உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சை சுகாதார பத்திரம் 169 இற்கமைய மேற்கொள்ளப்படும். வைத்திய சபையினால் நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்ய முடியாது.

11. **பயிற்சி.**-

11.1 மேற்படி பரீட்சைகள் அனைத்திலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள் மட்டுமே காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் தினத்தில் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்படுவதுடன் அதன் பின்னர் கட்டாய சேவைப் பயிற்சிக் காலம் நிறைவடையும் வரை அத்துறைக்குரிய பயிற்சி வழங்கப்படும்.

11.2 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனம் இரத்துச் செய்தல் என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

12. **பதவியின் தன்மை** நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும். (ஓய்வூதிய வேதன முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களிற்கு கீழ்படிதல் வேண்டும்.)

13. **சேவை நிபந்தனைகள்.**-

13.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் கீழ்குறித்த 13 : 3 பிரிவிற்கு கீழ்பட்டு மூன்று (03) வருடங்கள் பயிலுநர் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அரசகரும மொழிக் கொள்கையினை செயற்படுத்திட தற்போதைய அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் அது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்ட ஏதேனும் கட்டளையின் மீது அதற்கு அனுகூலமாக செயற்படல் வேண்டும்.

13.3 பொது சேவை ஆணைக்குழுவின் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சுற்று நிருபம், தாபனக் கோவை ஒழுங்குப்படுத்தல் நிதி ஒழுங்கு விதிகள், அரச நிர்வாக சுற்று நிருபங்கள் திறைசேரி சுற்று நிருபம், இலங்கைப் பொலிஸ் கட்டளை, பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல், பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபம், பொலிஸ் ஆலோசனை சட்டங்களின் ஒழுங்கு விதிகள் மற்றும் நியமனக் கடிதத்திலுள்ள நிபந்தனைகளிற்குக் கட்டுப்படல் வேண்டும்.

13.4 பயிலுநர் சேவைக் காலமானது நியமனத் திகதியிலிருந்து முதல் 03 வருடங்கள் வலுவில் இருப்பதுடன் அக்காலத்திற்குள் உத்தியோகத்தர்களிற்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. திருமணம் முடிக்க முடியுமானது பொலிஸ் சுற்று நிருபங்களில் வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளின் பிரகாரம் மட்டுமே. இந்த ஒழுங்கு விதிகள் மீறப்படும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

13.5 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நிறைவின் பின்னர் 05 வருடங்கள் கட்டாய சேவையினை மேற்கொள்ளல் வேண்டும். இந்த கட்டாய சேவைக் காலத்தை நிறைவு செய்யும் முன்னர் எவரேனும் ஏதேனும் பதவியிலிருந்து சுயமாக விலகிட முற்படுவாராயின் அவரிற்கான பயிற்சிகள் மற்றும் சீருடையுள்ளிட்ட ஏனைய செலவுகளிற்காக தீர்மானிக்கப்படும் தொகை அனைத்தும் விலகிச் செல்வதற்கான கடிதத்தினை கையளிக்கும் போதே செலுத்தும் விருப்பத்தை தெரிவிக்கும் ஒப்பந்தத்திற்கு வருதல் வேண்டும்.

விலகிச் செல்வது சம்பந்தமாக திணைக்கள கட்டளை ஒழுங்குவிதிகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும்/ பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்று நிருப ஒழுங்குவிதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13.6 நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் பொலிஸ் சேவையில் முதல் தடவையாக இணைத்துக் கொள்ளப்படும் போது தன்னிடமிருக்கும் சொந்தச் சொத்துக்கள் அல்லது பெயரில் எழுதப்பட்ட அல்லது சட்டரீதியாக பாரமளிக்கப்பட்ட அல்லது எல்லாவிதமான சொத்துக்கள் சம்பந்தமாகவும் தன்னிடமுள்ள பொறுப்புக்கள் சம்பந்தமான விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்வாங்க (திருத்தப்பட்ட) இலக்கம் 261 எனும் பொதுப் படிவத்தில் பதிவிட்டு பொலிஸ் மா அதிபரிற்கு அனுப்புதல் வேண்டும்.

உத்தியோகத்தர் திருமணம் முடித்தவுடன் மேற்கூறப்பட்ட விபரங்களையும் மனைவியினது விபரங்களையும் உள்ளடக்கி வழங்குதல் வேண்டும்.

மேலே விபரிக்கப்பட்டவாறு புதிய உரித்து அல்லது சொத்து கிடைக்கப்பெற்றால் அவ்வாறு பெற்றுக்கொள்ளப் பட்ட உரித்து அல்லது சொத்து சம்பந்தமாகவும் முழு விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க ஒவ்வொரு உத்தியோகத்தரும் எழுத்துமூலமாக பொலிஸ் மா அதிபரிற்கு அறிவித்தல் வேண்டும்.

13.7 பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைவாக செயற்படுவேன் என்று உறுதிகூறி சத்தியப்பிரமாணம் கொடுத்தல் வேண்டும்.

14. **நியமனம் நிரந்தரமாக்கல்:** நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் 03 வருட பயிலுநர் சேவைக் கால முடிவில் உத்தியோகத்தர்களின் தொழில் தருநரினால் நிரந்தர நியமனம் வழங்கப்படும். பயிலுநர் சேவை காலத்தில் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் உத்தியோகத்தரின் முதுநிலையானது மேலதிக கால அடிப்படையில் நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பட்டு சேவை நிரந்தரமாக்கப்படும்.

அப்படியானாலும் மேலதிக 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய தவறும் உத்தியோகத்தர்களினது நியமனம் நிரந்தரமாக்குதல் அல்லது பயிலுநர் காலத்தை நீடிப்பது சம்பந்தமாக நியமனம் வழங்கும் அதிகாரம் பெற்றவர் தீர்மானித்தாலன்றி நியமனம் முடிவுறுத்தப்படும்.

15. **வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை:**

வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை நடைமுறைப்படுத்தல் கீழ் வருமாறாகும்.

| வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை விபரம் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டியது எத்தனை வருட காலத்திற்கு முன்னர் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை தன்மை எழுத்துப் பரீட்சை தொழில் பரீட்சை/சன்றிதழ் பாடநெறி / வேறு |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை) | பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செய்முறை மற்றும் வாய்மொழி |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் மேஜர் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |

16. **மொழிப் புலமை:**

| மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய புலமை |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய அரசகரும மொழித் திறனை நன்னடத்தைக் காலத்திற்குள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| ஏனைய அரசகரும மொழிகள் | அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 18/2020 மற்றும் அதற்கு துணையான சுற்று நிருபப் படி உரிய மட்டத்திற்கான திறனை பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

17. (அ) இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளுக்கு நியமனம் செய்தல் சம்பந்தமாக உரியதான பொது நிபந்தனை பாதிக்கும்.

18. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (மூலப் பிரதிகளை சமர்ப்பித்தலாகாது)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;
(இ) கல்வித் தகைமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்.

19. (அ) தற்சமயம் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பத்தை உரிய நிறுவனத்தின் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரை விடுவிக்க முடியுமென்ற சான்றிதழை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை A4 அளவான வெள்ளைத் தாளில் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி உரிய உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்ப் பிரதிகளுடன் மேலே இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் எந்தவிதமான காரணத்தினாலும் அது எவரேனும் உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட ரீதியில் பாரம் கொடுத்தலாகாது.

**குறிப்பு** - மேலும் இவ் விண்ணப்பப்படிவத்திற்கு மேலதிகமாக நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை (Online application) பூர்த்தி செய்வதற்கு www.police.lk என்ற இணையத்தளத்தில் உள்ள "join us" ஐ கிளிக் click செய்வதுடன் அல்லது www.public.police.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை அனுப்பப்படல் வேண்டும்.

20. இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லாவகையிலும் உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரிசீலனை மற்றும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளிற்கு போக்குவரத்துச் செலவோ அல்லது ஏனைய செலவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

தேசபந்து தென்னக்கோன்,
பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

| காரியாலய உபயோகத்திற்கு<br>2" × 2 1/2" அளவு |
|---|

1. (அ) முழுப் பெயர் (தமிழில்) :..............................................................................................................................
..............................................................................................................................
(தெளிவாகப் பெரிய எழுத்துக்களில்) பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறு இருத்தல் வேண்டும்.

(i) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) தமிழில்: ..............................................................................................................................

(ii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(இ) விண்ணப்பிக்கும் பதவி :..............................................................................................................................

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :............................................................ (தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதியை இணைத்து அனுப்பவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :..............................................................................................................................

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :..............................................................................................................................

பிறந்த இடத்திற்கான பிரதேச செயலகம் :............................................... மாகாணம் :.......................................................

5. (அ) தற்போதைய முகவரி (தமிழில்) :..............................................................................................................................

(i) தற்போதைய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) தற்போதைய முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு :..............................................................................................................................

(இ) நிரந்தர முகவரி தமிழில் :..............................................................................................................................

(ii) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஈ) நிரந்தர முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு : ..............................................................................................................................

(உ) கடிதங்கள் பரிமாறப்படவேண்டிய முகவரி :..............................................................................................................................

(ஊ) நிரந்தர முகவரிக்கான கிராம அலுவலர் பிரிவு :..............................................................................................................................
பிரதேச செயலகம் :..............................................................................................................................

(எ) தொலைபேசி இலக்கம் வீடு :............................................. செல்லிடப்பேசி :..............................................................................

(ஏ) மின்னஞ்சல் விலாசம் :............................................... வாட்ஸ் அப் இல. :..............................................................................

6. (அ) இனம் :............................................................................

7. பிறந்த திகதி :............................ (பிறப்புச் சான்றிதழின் நிழற்படப் பிரதியை இணைக்கவும்)
வயது : ............... (வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்ப முடிவுத் திகதியன்று)

8. உயரம் : ................................ அடி ...................... அங்குலம் மார்பளவு : ............................ அங்குலம்
உயரம் : சென்டிமீற்றர் :................................ மார்பளவு சென்டிமீற்றர் : ............................

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகளைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :........................
..............................................................................................................................

க. பொ. த. சா./தர பரீட்சைப் பெறுபேறு
வருடம் :........................................... சுட்டெண் :...............................................

| பாடங்கள் | சித்தி | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

10. எழுத்துப் பரீட்சைக்கு தோற்றும் ஊடக மொழி :..............................................................................................................

11. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :...............................................................

12. (அ)தற்சமயம் செய்யும் தொழில் :...............................................................

13. நீர் இதற்கு முன்னர் இலங்கைப் பொலிஸ் சேவையில் இருந்துள்ளீரா? .......................................................................................
பதவி/சீருடை இலக்கம் :...............................................................................................................................................
அவ்வாறாயின் நீர் அப்பதவியிலிருந்து விலகியமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக :..............................................................

14. (அ) நீர் ஆயுதப்படையில்/ தொண்டர் படையில் இணைந்து சேவை செய்கின்றீரா ? அவ்வாறாயின் விண்ணப்பத்தை உரிய படைத்தள பிரதானி ஊடாக சமர்ப்பிக்கவும் :.......................................................................................................................

(ஆ) நீர் ஆயுதப்படையில்/ ஆயுத தொண்டர் படையில் சேவை செய்துள்ளீரா ? அவ்வாறாயின் விலகியபோது வழங்கப்பட்ட அச்சான்றிதழின் நிழற்படப் பிரதியை இணைக்கவும். அத்துடன் நீர் ஆயுதப் படையில் இருந்து தப்பி ஓடி இருந்தால் அல்லது தண்டனைக்குட்பட்டு இருந்தால் அதன் விபரம் :.....................................................................................................
...........

15. நீர் ஏதேனும் குற்றத்திற்காகவோ அல்லது சந்தேகத்தின் பேரில் (பாரிய குற்றங்கள் அல்லது கேவலமான குற்றம் அல்லது ஊழல் குற்றம்) சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டுள்ளீரா ? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? (அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும்) :..................
..................................................................................

16. உமது உறவினர் எவரேனும் ஒருவர் ஏதேனும் குற்றத்திற்காக அல்லது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனரா? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக (பாரிய குற்றங்கள் அல்லது கேவலமான குற்றம் அல்லது ஊழல் குற்றம்) சம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளனரா? (அவ்வாறாயின் விபரத்தை குறிப்பிடவும்) :.....................................................................................................

மேற்படி விடயங்கள் என் அறிவிற்கெட்டிய படியும் நம்பிக்கைப் படியும் உண்மையானதென்றும் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் மேற்படி தகவல்கள் பிழையானது அல்லது பொய்யானவை என்று தெரியவந்தால் நான் சேவையில் இணைக்கப்பட்டிருந்தாலும் எவ்வேளையிலும் இலங்கைப் பொலிஸ் சேவையை உடனடியாக இடை நிறுத்த உடன்படுதல் வேண்டும் என்பதை அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :...............................

17. நிறுவனப் தலைவரின் அறிக்கை (உரிய பெயர் மட்டும்) :

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ...................................... அவர்கள் ............................................... திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுகிறார் என்றும் அவர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென்றும் தெரிவிக்கின்றேன்.

.................,
நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
இலச்சினையும்.

பதவி :...........................
திகதி :...........................

**குறிப்பு** - மேலும் இவ் விண்ணப்பப்படிவத்திற்கு மேலதிகமாக நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை (Online application) பூர்த்தி செய்வதற்கு www.police.lk என்ற இணையத்தளத்தில் உள்ள "join us" ஐ கிளிக் click செய்வதுடன் அல்லது www. public.police.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை அனுப்பப்படல் வேண்டும்.

03-433/2

## இலங்கைப் பொலிஸ்

பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதிப் பதவி

இலங்கைப் பொலிஸில் பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழே காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து பணிப்பாளர், பயிலுனர் ஆடசேர்ப்புப் பகுதி, இலக்கம் 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு-06 எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு அதனை பதிவுத் தபாலில் 2024.04.30 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸால் விண்ணப்பப்படிவங்கள் வினியோகிக்கப்படமாட்டாது.

03. **வேதன முறைமை-மாதாந்தம்** : ரூபா 29,540 - 7 × 300 - 27 × 370 - ரூபா 41,630

இந்த வேதனக் கொடுப்பனவானது அ. நி. சுற்று நிருப இல. 03/2016 இன்படி மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இவ் உத்தியோகத்தர்களிற்கு 2022.12.15 ஆம் திகதிய CRTM 260 RTM 385 இன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் சகல கொடுப்பனவுகளும் உரித்தானது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவிற்கு மேலதிகமாக இங்கு கீழ்வரும் கொடுப்பனவுகள் இவர்களிற்கு மாதாந்தம் கிடைக்கப்பெற உரித்தானது.

| | | |
|---|---|---|
| (அ) | வாழ்வாதாரச் செலவுக் கொடுப்பனவு | - ரூபா 12,800.00 |
| (ஆ) | அ. நி. சுற்று நிருப இல. 03/2016 இன்படி பதவிக்கேற்ப 40% கொடுப்பனவு | - ரூபா 11,816.00 |
| (இ) | கஷ்டப்பிரதேச சலுகைக் கொடுப்பனவு | - ரூபா 2000.00 |
| (ஈ) | உள்ளக இடைக்காலக் கொடுப்பனவு | - ரூபா 7500.00 |
| (உ) | சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு | - ரூபா 250.00 |
| (ஊ) | உணவு மற்றும் தங்குமிடம் கொடுப்பனவு | - ரூபா 28,800.00 |

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கான இலவச வைத்திய வசதி (வெளிநாட்டில் சிகிச்சை பெற நிதி உதவி பெற்றுக்கொள்ள முடியும்) ;

(இ) சீருடை அனைத்தும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு அரச பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகளை கற்க சந்தர்ப்பம் அளிக்கப்படும் ;

(உ) உங்களது விளையாட்டுத் திறமை மற்றும் ஏனைய திறமைகளை விருத்தி செய்வதற்கான வசதிகள் ;

(ஊ) கடமைக்கு செல்வதற்கான கட்டணம் மற்றும் கஷ்டப் பிரதேசக் கடமைக்கானதும் விஷேட கடமைக்கான வெகுமதியாக பணப்பரிசுகளும் வழங்கப்படும்.

04. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

4.1 **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது 18 - 28 க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4.2 **கல்வித் தகைமைகள்.-**
க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஊடக மொழியுட்பட இருதடவைக்கு மேற்படாத தவணையில் இருபாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு 01-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின்படி பாட எண் 41, 44 விஞ்ஞான பாடங்கள் என்பன ஒரே பாடமாகவும் எண் 42 மற்றும் 45 கணித பாடங்கள் ஒரே பாடமாகவும் கவனிக்கப்பட்டு பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 02-** க.பொ.த. (சா./ த.) பரீட்சையில் கணினிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது அப்பாடத்தில் செய்முறைப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பின் அப்பாடத்தில் சித்தி அடையாததாகவே கருதப்படும்.

**குறிப்பு 03-** வேறு தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள பாடங்கள் க.பொ.த. (சா./ த.) பரீட்சை அட்டவணைக்குட்படாமையினால் அப்பாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் க.பொ.த. (சா./ த.) பரீட்சையில் சித்தியடைந்ததாகக் கருதப்படமாட்டாது.

4.3 **தொழில்சார் தகைமைகள்.-**

**இலகுவாகனங்களுக்கும் கனரக வாகனங்களுக்குமான செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்**

**குறிப்பு 01.** மோட்டார் திருத்தும் அனுபவம் அல்லது மோட்டார் மெக்கானிக் அல்லது வாகனம் செலுத்தும் நீண்டகால அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

4.4 **உடற்தோற்றம் :**

* உயரம் : 05 அடி 02 அங்குலம் சென்றிமீட்டர் 157.48 (குறைந்தது)
மார்பளவு : 30 அங்குலம் சென்றிமீட்டர் 76 (குறைந்தது மூச்சுக்காற்று அற்ற)

4.4.1 ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் கடமையாற்றவும் பதவியின் கடமையினை நிறைவேற்றவும் போதியளவு மனத்தைரியமும் உடலுறுதியும் இருத்தல் வேண்டும்.

4.4.2 **கட்புல தொழிற்பாடு.-** மூக்குக் கண்ணாடி ஒரு சோடி அல்லது கண்வில்லை இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தளவு பார்வை 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும் போது மற்றைய கண்ணானது 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.4.3 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருந்தாத மற்றும் கடமைக்குத் தடையான வகையில் அறுவைச் சிகிச்சை மூலம் உடலுறுப்புக்கள் பொருத்தப்பட்ட ஊனமுற்றவராக அல்லாதிருத்தல் வேண்டும்.

4.5 **வேறு தகுதிகள் .-**

4.5.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.5.2 விண்ணப்பதாரி குற்றச்செயல்களில் ஈடுபடாத ஒழுக்கமானவராக இருத்தல் வேண்டும்.

4.5.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் உள்ளவர்களும் விண்ணப்பிக்கத் தகுதி அற்றவர்களாவர்).

4.5.4 நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.

4.5.5 பதவிக்கு சேர்வதற்கு தேவையான 4:1, 4:2 ஆகிய தகுதிகளை விண்ணப்பப் படிவம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் 4 : 4 இல் கோரப்பட்டுள்ள தகுதிகள் சேர்த்துக் கொள்ளப்படும் தினத்தன்று அவ்வாறே இருத்தல் வேண்டும்.

5. **ஆரம்ப பரீட்சை.-** விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் அடிப்படைத் தகுதிகளையும் வயதெல்லையையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே ஆரம்ப பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப்பரீட்சையில் பந்தி 4:1, 4:2, 4:3 மற்றும் 4.4 (4:4:1 மற்றும் 4:4:2 தவிர்ந்த) தகுதிகள் பரிசீலிக்கப்படும்.

ஆரம்ப பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் தேகாரோக்கிய பரிசோதனைக்கு சமுகமளித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரிசோதனையின் போது அதற்கு முகம் கொடுக்க தகுதியானவர்கள் என அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பம் இலங்கை வைத்திய சபையில் பதிவு பெற்ற வைத்தியரின் சிபாரிசுக் கடிதத்துடன் அவ்வேளையிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஆரம்ப பரீட்சையில் சித்தியடையும் அனைத்து விண்ணப்பதாரிகளும் தேகாரோக்கிய பரிசீலனைக்கு அனுப்பப்படுவதுடன் அங்கு 1000 மீற்றர் தூரத்தை 05 நிமிடங்களிற்கு குறைவான நேரத்திற்குள் ஓடிமுடித்தால் தேகாரோக்கிய பரிசீலனையில் சித்தியடைந்தவர்களாக கணிக்கப்படும்.

**குறிப்பு**.- 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர்.

06. **தொழில்சார் பரீட்சை**.- ஆரம்ப பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தொழில்சார் பரீட்சை கீழ்வரும் பாடங்களில் இடம்பெறும்.

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | சித்தியடையத் தேவையான புள்ளி விகிதம் |
|---|---|---|
| 01. எழுத்துப் பரீட்சை | 40 | 20 } 50% |
| 02. செய்முறைப் பரீட்சை | 60 | 30 |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**.- ஆரம்ப பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர். கட்டமைக்கப்பட்ட சுருக்க முறை நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ் மாஅதிபரினால் நியமிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | தேர்ந்தெடுக்க கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகளின் தொகை |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 20 | தேவையற்றது |
| 2. தொழில்நுட்ப அறிவு/மொழி அறிவு/கணினி இயலுமை/ வேறு | 20 | |
| 3. விளையாட்டுத் திறமை | 20 | |
| 4. தலைமைத்துவம்/பொது சேவைகள் | 20 | |
| 5. நேர்முகப் பரீட்சை சபையின் பாராட்டு | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **இணைத்துக்கொள்ளப்படும் முறை**.- தொழில்சார் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகண முறைப்படி பட்டியல் தயாரிக்கப்படும். அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன்படி வெற்றிட எண்ணிக்கையின் 125% விண்ணப்பதாரிகள் கணக்கெடுத்து பின்னணிப் பரீட்சைக்கும் மற்றும் வைத்திய பரிசோதனைக்கும் அழைக்கப்பட்டு அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளில் இருந்து ஏற்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவிகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**குறிப்பு**.- மேற்படி திட்டத்திற்கு புறம்பாக உள்ளூர், சர்வதேச மட்டத்தில் தேசிய மட்டத்தில் அல்லது விஷேட விளையாட்டுத் திறமையினைப் பெற்றுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான அல்லது திறமையினை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் மற்றும் மார்பளவு சம்பந்தமான தகைமைகள் கவனத்தில் கொள்ளாது ஏனைய தகுதிகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட தேர்வு அதிகாரியின் தீர்மானத்திற்கமைய இணைத்துக்கொள்ளப்படுவார்.

09. **பின்னணிப் பரீட்சை**.-

9.1 மேற்படி 08 ஆம் பந்திப்படி இணைத்துக் கொள்வதற்கான தகுதியினைப் பெற்ற விண்ணப்பதாரிகள் சம்பந்தமாகவும் நன்னடத்தையை உறுதிப்படுத்த பின்னணிப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

9.2 இங்கு விண்ணப்பதாரியின் பாதகமான அறிக்கைகள் இருப்பின் உறுதிப்படுத்திக்கொள்ள அவரும் அவரது நெருங்கிய உறவினர்கள், அவருடன் நெருங்கிப் பழகியவர்களதும் குற்றப் பின்னணி மற்றும் பழக்கவழக்கங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யப்படும் என்பதுடன் குற்றப்பின்னணி அறிக்கையுடன் விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

9.3 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குதல் அவர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதியன்று. பொய்யான தகவல்களை வழங்கியமை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எந்த வேளையிலும் சேவையிலிருந்து அகற்றப்படுவார்.

**குறிப்பு.-** நடைமுறை விதிகளின் பிரிவு 59 மற்றும் தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் 7:2:4:5:2 பிரிவுகள் மற்றும் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை 2014/2007 இற்கு அமைய நீங்கள் பொய்யான தகவல்களை வழங்கி பொலிஸ் சேவைக்கு இணைக்கப்பட்டது தெரிய வந்தால் நீங்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவீர்கள் என்று எட்டப்படும் தீர்மானத்திற்கு உடன்படல் வேண்டும்.

10. **வைத்தியப் பரிசோதனை.-** பாதகமான பின்னணி அறிக்கை அற்றவர்கள் வைத்திய பரிசோதனைக்கு தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள். பொலிஸ் வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரியுள்ளிட்ட வைத்திய சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். இங்கு விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைக்கு தகுதியானவரென உடற்தேர்வு மற்றும் மனநல சௌக்கியம் சம்பந்தமான பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். வைத்திய பரிசோதனைக்கு ஒரு முறை மட்டுமே உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சை சுகாதார பத்திரம் 169 இற்கமைய மேற்கொள்ளப்படும். வைத்திய சபையினால் நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்ய முடியாது.

11. **பயிற்சி.-**

11.1 மேற்படி பரீட்சைகள் அனைத்திலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள் மட்டுமே காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் தினத்தில் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்படுவதுடன் அதன் பின்னர் கட்டாய சேவைப் பயிற்சிக் காலம் நிறைவடையும் வரை அத்துறைக்குரிய பயிற்சி வழங்கப்படும்.

11.2 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனம் இரத்துச் செய்தல் என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

12. **பதவியின் தன்மை.-** நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும். (ஓய்வூதிய வேதன முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களிற்கு கீழ்படிதல் வேண்டும்.)

13. **சேவை நிபந்தனைகள்.-**

13.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் கீழ்குறித்த 13 : 3 பிரிவிற்கு அமைந்து மூன்று (03) வருடங்கள் பயிலுநர் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அரசகரும மொழிக் கொள்கையினை செயற்படுத்திட தற்போதைய அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் அது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்ட ஏதேனும் கட்டளையின் மீது அதற்கு அனுகூலமாக செயற்படல் வேண்டும்.

13.3 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சுற்று நிருபம், தாபனக் கோவை ஒழுங்குப்படுத்தல், நிதி ஒழுங்கு விதிகள், அரசாங்க நிர்வாக சுற்று நிருபங்கள் திறைசேரி சுற்று நிருபம், இலங்கைப் பொலிஸ் கட்டளை, பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல், பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபம், பொலிஸ் ஆலோசனை சட்டங்களின் ஒழுங்கு விதிகள் மற்றும் நியமனக் கடிதத்திலுள்ள நிபந்தனைகளுக்குக் கட்டுப்படல் வேண்டும்.

13.4 பயிலுநர் சேவைக் காலமானது நியமனத் திகதியிலிருந்து முதல் 03 வருடங்கள் வலுவில் இருப்பதுடன் அக்காலத்திற்குள் உத்தியோகத்தர்களிற்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. திருமணம் முடிக்க முடியுமானது பொலிஸ் சுற்று நிருபங்களில் வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளின் பிரகாரம் மட்டுமே. இந்த ஒழுங்கு விதிகள் மீறப்படும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

13.5 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நிறைவின் பின்னர் 05 வருடங்கள் கட்டாய சேவையினை மேற்கொள்ளல் வேண்டும். இந்த கட்டாய சேவைக் காலத்தை நிறைவு செய்யும் முன்னர் எவரேனுமாள் ஏதேனும் பதவியிலிருந்து சுயமாக விலகிட முற்படுவாராயின் அவருக்கான பயிற்சிகள் மற்றும் சீருடையுள்ளிட்ட ஏனைய செலவுகளுக்காக தீர்மானிக்கப்படும் தொகை அனைத்தும் விலகிச் செல்வதற்கான கடிதத்தினை கையளிக்கும் போதே செலுத்தும் விருப்பத்தை தெரிவிக்கும் ஒப்பந்தத்திற்கு வருதல் வேண்டும்.

விலகிச் செல்வது சம்பந்தமாக திணைக்கள கட்டளை ஒழுங்குவிதிகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்று நிரூப ஒழுங்குவிதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13.6 நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் பொலிஸ் சேவையில் முதல் தடவையாக இணைத்துக் கொள்ளப்படும் போது தன்னிடமிருக்கும் சொந்தச் சொத்துக்கள் அல்லது பெயரில் எழுதப்பட்ட அல்லது சட்டரீதியாக பாரமளிக்கப்பட்ட அல்லது எல்லாவிதமான சொத்துக்கள் சம்பந்தமாகவும் தன்னிடமுள்ள பொறுப்புக்கள் சம்பந்தமான விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்வாங்க (திருத்தப்பட்ட) இலக்கம் 261 எனும் பொதுப் படிவத்தில் பதிவிட்டு பொலிஸ் மா அதிபரிற்கு அனுப்புதல் வேண்டும்.

உத்தியோகத்தர் திருமணம் முடித்தவுடன் மேற்கூறப்பட்ட விபரங்களையும் மனைவியினது விபரங்களையும் உள்ளடக்கி வழங்குதல் வேண்டும்.

மேலே விபரிக்கப்பட்டவாறு புதிய உரித்து அல்லது சொத்து கிடைக்கப்பெற்றால் அவ்வாறு பெற்றுக்கொள்ளப் பட்ட உரித்து அல்லது சொத்து சம்பந்தமாகவும் முழு விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க ஒவ்வொரு உத்தியோகத்தரும் எழுத்துமூலமாக பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்தல் வேண்டும்.

13.7 பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைவாக செயற்படுவேன் என்று உறுதிகூறி சத்தியப்பிரமாணம் கொடுத்தல் வேண்டும்.

14. **நியமனம் நிரந்தரமாக்கல்.-** நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் 03 வருட பயிலுநர் சேவைக் கால முடிவில் உத்தியோகத்தர்களின் தொழில் தருநரினால் நிரந்தர நியமனம் வழங்கப்படும். பயிலுநர் சேவை காலத்தில் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் உத்தியோகத்தரின் முதுநிலையானது மேலதிக கால அடிப்படையில் நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பட்டு சேவை நிரந்தரமாக்கப்படும்.

அப்படியானாலும் மேலதிக 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய தவறும் உத்தியோகத்தர்களினது நியமனம் நிரந்தரமாக்குதல் அல்லது பயிலுநர் காலத்தை நீடிப்பது சம்பந்தமாக நியமனம் வழங்கும் அதிகாரம் பெற்றவர் தீர்மானித்தாலன்றி நியமனம் முடிவுறுத்தப்படும்.

15. **வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை.-**

வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை நடைமுறைப்படுத்தல் கீழ் வருமாறாகும்.

| வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை விபரம் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய கால வரையறை | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை தன்மை எழுத்துப் பரீட்சை/தொழில் பரீட்சை/சன்றிதழ் பாடநெறி / வேறு |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை) | பொலிஸ் கானஸ்டபிள் சாரதி பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செய்முறை மற்றும் வாய்மொழி |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் சாரதி பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் மேஜர் சாரதி பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |
| 4 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | உப பொலிஸ் பரிசோதகர் (போக்குவரத்து) பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |

16. **மொழிப் புலமை.-**

| மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய புலமை |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய அரசகரும மொழித் திறனை நன்னடத்தைக் காலத்திற்குள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| ஏனைய அரசகரும மொழிகள் | அரசாங்க நிர்வாக சுற்று நிருபம் 18/2020 மற்றும் அதற்கு துணையான சுற்று நிருபப் படி உரிய மட்டத்திற்கான திறனை பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

17. (அ) இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளுக்கு நியமனம் செய்தல் சம்பந்தமாக உரியதான பொது நிபந்தனை பாதிக்கும்.

18. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் கடிதக் கோவைகளின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (மூலப் பிரதிகளை சமர்ப்பித்தலாகாது)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;

(இ) கல்வித் தகைமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்;

(ஈ) செல்லுபடியாகும் வாகன சாரதி பத்திரம்.

19. (அ) தற்சமயம் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பத்தை உரிய நிறுவனத்தின் பிரதானி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரை விடுவிக்க முடியுமென்ற சான்றிதழை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை A4 அளவான வெள்ளைத் தாளில் தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி உரிய உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்ப் பிரதிகளுடன் மேலே இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் எந்தவிதமான காரணத்தினாலும் அது எவரேனும் உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட ரீதியில் பாரம் கொடுத்தலாகாது.

**குறிப்பு** - மேலும் இவ் விண்ணப்பப்படிவத்திற்கு மேலதிகமாக நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை (Online application) பூர்த்தி செய்வதற்கு www.police.lk என்ற இணையத்தளத்தில் உள்ள "join us" ஐ கிளிக் click செய்வதுடன் அல்லது www.public.police.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை அனுப்பப்படல் வேண்டும்.

20. இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லாவகையிலும் உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

**குறிப்பு.**- பரிசீலனை மற்றும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளிற்கு போக்குவரத்துச் செலவோ அல்லது ஏனைய செலவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

தேசபந்து தென்னக்கோன்,
பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி

காரியாலய உபயோகத்திற்கு
2" × 2 1/2" அளவு

1. (அ) முழுப் பெயர் (தமிழில்) :................................................................................................................
..........................................................................................................................................................
(தெளிவாகப் பெரிய எழுத்துக்களில்) பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறு இருத்தல் வேண்டும்.

(i) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்)

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) தமிழில்:

(ii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :

(இ) விண்ணப்பிக்கும் பதவி :..........................................................................................................

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :............................................................ (தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற் பிரதியை இணைத்து அனுப்பவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :..........................................................................................................

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :..................................................................................................

பிறந்த இடத்திற்கான பிரதேச செயலகம் :............................................... மாகாணம் :...............................................

5. (அ) தற்போதைய முகவரி (தமிழில்) :.........................................................................................

(i) தற்போதைய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்)

(ஆ) தற்போதைய முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு :..................................................................

(இ) நிரந்தர முகவரி தமிழில் :.........................................................................................................

(ii) தற்போதைய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்)

(ஈ) நிரந்தர முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு : ......................................................................

(உ) கடிதங்கள் பரிமாறப்படவேண்டிய முகவரி :................................................................................

(ஊ) நிரந்தர முகவரிக்கான கிராம அலுவலர் பிரிவு :..........................................................................
பிரதேச செயலகம் :.......................................................................................................................

(எ) தொலைபேசி இலக்கம் வீடு :.......................................... நடமாடும் :...........................................

(ஏ) மின்னஞ்சல் விலாசம் :............................................... வாட்ஸ் அப் இல. :...............................................

6. (அ) இனம் :...........................................................................

7. பிறந்த திகதி :............................ (பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
வயது (வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்ப முடிவுத் திகதியன்று)

8. உயரம் : ................................ அடி ...................... அங்குலம் மார்பளவு : ............................ அங்குலம்
உயரம் : சென்டிமீற்றர் :................................ மார்பளவு சென்டிமீற்றர் : ............................

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்துள்ள பரீட்சைகளைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :.................
.................................................................................................................................................................

க. பொ. த. சா/தர பரீட்சை பெறுபேறு
வருடம் :.......................................... சுட்டெண் :................................................

| பாடங்கள் | சித்தி | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

10. எழுத்துப் பரீட்சைக்கு தோன்றும் ஊடக மொழி :.................................................................

11. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :................................................................

12. (அ)தற்சமயம் செய்யும் தொழில் :.................................................................

13. நீர் இதற்கு முன்னர் இலங்கைப் பொலிஸ் சேவையில் இருந்துள்ளீரா? ...........................................................................................
பதவி/சீருடை இலக்கம் :.........................................................................................................................................
அவ்வாறாயின் நீர் அப்பதவியிலிருந்து விலகியமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக :...........................................................

14. (அ) நீர் ஆயுதப்படையில்/ தொண்டர் படையில் இணைந்து சேவை செய்கின்றீரா ? அவ்வாறாயின் விண்ணப்பத்தை உரிய படைத்தள பிரதானி ஊடாக சமர்ப்பிக்கவும் :...................................................................................................................

(ஆ) நீர் ஆயுதப்படையில்/ ஆயுத தொண்டர் படையில் சேவை செய்துள்ளீரா ? அவ்வாறாயின் விலகியபோது வழங்கப்பட்ட அச்சான்றிதழின் நிழற் பிரதியை இணைக்கவும். அத்துடன் நீர் ஆயுதப் படையில் இருந்து தப்பி ஓடி இருந்தால் அல்லது தண்டனைக்குட்பட்டு இருந்தால் அதன் விபரம் :....................................................................................................................

15. நீர் ஏதேனும் குற்றத்திற்காகவோ அல்லது சந்தேகத்தின் பேரில் (பாரிய குற்றங்கள் அல்லது கேவலமான குற்றம் அல்லது ஊழல் குற்றம்) சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டுள்ளீரா ? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? (அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும்) :.................
.................................................................

16. உமது உறவினர் எவரேனும் ஒருவர் ஏதேனும் குற்றத்திற்காக அல்லது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனரா? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக (பாரிய குற்றங்கள் அல்லது கேவலமான குற்றம் அல்லது ஊழல் குற்றம்) சம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளனரா? (அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும்) :...................................................................................................

மேற்படி விடயங்கள் என் அறிவிற்கெட்டிய படியும் நம்பிக்கைப் படியும் உண்மையானதென்றும் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் மேற்படி தகவல்கள் பிழையானது அல்லது பொய்யானவை என்று தெரியவந்தால் நான் சேவையில் இணைப்பட்டிருந்தாலும் எவ்வேளையிலும் இலங்கைப் பொலிஸ் சேவையை உடனடியாக இடை நிறுத்த கீழ்ப்படிய வேண்டும் என்பதை அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :...............................

17. நிறுவனப் பிரதானியின் அறிக்கை (உரிய பெயர் மட்டும்) :

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ...................................... அவர்கள் ............................................... திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் என்றும் அவர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென்று தெரிவிக்கின்றேன்.

.................,
நிறுவனப் பிரதானியின் கையொப்பமும்
அதிகாரபூர்வ முத்திரையும்.

பதவி :.............................
திகதி :.............................

**குறிப்பு** - மேலும் இவ் விண்ணப்பப்படிவத்திற்கு மேலதிகமாக நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை (Online application) பூர்த்தி செய்வதற்கு www.police.lk என்ற இணையத்தளத்தில் உள்ள "join us" ஐ கிளிக் click செய்வதுடன் அல்லது www. public.police.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை அனுப்பப்படல் வேண்டும்.

*03-433/3*

---

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

**கல்வி அமைச்சின் திறன் விருத்தி தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவில் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று அதிகாரி சேவை வகுதி தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு - 2024**

கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவில் நிறைவேற்று அதிகாரி சேவை வகுதி தரம் III இனை சார்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவியை நிரப்புவதற்கு இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களில், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட திறன் மதிப்பீடு நேர்காணல் குழுவால் நடத்தப்பட்ட திறன் மதிப்பீட்டு நேர்காணலின் முடிவுகளின் அடிப்படையில் அதிக மதிப்பெண்கள் பெறும் விண்ணப்பதாரி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) மதிப்பெண்கள் பற்றிய திட்டங்களின் அடிப்படையில் திறன் மதிப்பீட்டு நேர்காணல் நடத்தப்படும்.

நியமனத் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) **கல்வி/தொழில் தகைமைகள் :**

உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதவிப் பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

(ii) **அனுபவம்** :

உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்பு மூன்று (03) ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியில் ஒரு வழக்கறிஞராகத் தொழில்முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (வழக்கறிஞர் என்ற வகையில் பெற்றுக்கொண்ட தொழில்முறை அனுபவத்திற்கான சான்றுகள், அனுபவம் பெற்ற காலம், சான்றளிப்பவரின் அதிகாரப்பூர்வ முத்திரை மற்றும் சான்றுபடுத்தும் திகதி ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்பிடல் வேண்டும்.)

அல்லது

உச்ச நீதிமன்றின் வழக்கறிஞராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பிறகு அரசாங்க நிறுவனத்தில் சட்டப் பதவியில் மூன்று (03) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

(இந்த விடயங்களாவன செயலாளர்/திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் ஆகியவர்களால் வழங்கப்பட்ட கடிதம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.)

**குறிப்பு** : அடிப்படைத் தகுதியை நிரூபிக்கும் ஆவணங்களின் நகல்களாவன விண்ணப்பத்தாரளால் சான்றளிக்கப்பட்டு அவை விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். சேவை காலப்பகுதியின் தொடக்கம் மற்றும் முடிவுத் திகதி பற்றி தெளிவாகக் குறிப்பிடாத சான்றிதழ்கள் இணைக்கப்பட்ட விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாது நிராகரிக்கப்படலாம்.

* ஒரு சட்டப் பதவியினை பொறுத்தவரையில் ஒரு சட்டப் பட்டம் அல்லது உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞராகப் பதவியேற்றிருத்தல் என்பது பணியமர்த்தப்படுவதற்கான அடிப்படைத் தகுதியாகும்.

(iii) **தேகாரோக்கிய நிலை :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவிக்கான கடமைகளைச் செய்வதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

(iv) **ஏனைய தகைமைகள் :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
- விண்ணபதாரர் மிகச் சிறந்த குண நலங்கள் கொண்டவராக இருத்தல் வேண்டும்;
- பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் விண்ணப்பங்கள் அழைக்கப்படுவதற்கான இறுதி திகதிக்குள் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

3. **தொழில் மற்றும் சேவை தொடர்பான நிபந்தனைகள்.-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதும் ஆகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கு நீங்கள் பங்களிக்க வேண்டும். இது தொடர்பில் அரசாங்கத்தால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தொகையானது உங்களால் செலுத்தப்பட்டு இத்திட்டத்திற்கு நீங்கள் பங்களித்தல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டது. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதியினையும் 18/2020 எனும் இலக்கத்தினையும் கொண்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கை அல்லது இந்த விடயத்துடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு அமைவுற, பதவிக்கு நியமனம் பெற்று ஐந்து ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்னர், அவர்கள் எந்த மொழியில் பணியில் சேர்ந்தார்களோ அந்த மொழியினை விட மேலதிகமாக பிற அதிகாரப்பூர்வ மொழியிலும் பொருத்தமான புலமை பெறுதல் வேண்டும். மற்றும் உத்தியோகபூர்வ மொழியல்லாத ஊடகத்தில் சேவையில் இணையும் அதிகாரிகள், தகுதிகாண் காலத்தின் போது குறித்துரைக்கப்பட்ட உத்தியோகபூர்வ மொழியில் புலமை பெறுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனமானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, அரசாங்கத்தின் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் பிற திணைக்கள உத்தரவுகளுக்கு உட்பட்டது.

(v) விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்ப மொழி ஊடகம் பின்னர் மாற்ற அனுமதிக்கப்படாது மேலும் நீங்கள் நியமனம் பெற தகுதியான மொழி ஊடகம் விண்ணப்பப் படிவத்தில் நீங்கள் குறிப்பிடும் மொழி ஊடகமாக இருக்கும்.

4. **வயதெல்லை.-** விண்ணப்ப முடிவுத் திகதியன்றிற்கு 21 வயதினை விட குறையாதவராகவும் 45 வயதினை விட மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.-** 2016.02.25 ஆந் திகதியினையும் 03/2016 எனும் இலக்கத்தினையும் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையினது உப அட்டவணை I இன் படி இந்தப் பதவி தொடர்பான மாத சம்பள அளவுத்திட்டமானது ரூபா 47,615.00 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 (SL 1- 2016).

6. திறன் மதிப்பீட்டு நேர்காணல் ஊடாக விண்ணப்பதாரியின் திறன் மதிப்பீடு செய்வதற்கு புள்ளிகள் பற்றிய பின்வரும் திட்ட அடிப்படையானது பயன்படுத்தப்படும்:

<table>
<tr><th>தொடர் இலக்கம்</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>அதிகூடிய புள்ளிகள்</th></tr>
<tr><td>01.</td><td>மேலதிக கல்வித் தகைமைகள்<br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டம் எனும் விடய துறையில் பட்டப்பின் படிப்பு பட்டம்<br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டம் எனும் விடய துறையில் பட்டப் பின் டிப்ளோமா பட்டம் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்தில் சட்டம் எனும் விடய துறையில் பட்டபின் டிப்ளோமா பட்டம்<br>(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டம் எனும் விடய துறையில் பெறப்பட்ட பட்டம் -<br>• முதலாம் வகுப்பு பட்டம்<br>• இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு<br>• ஏதேனும் ஒரு வகுப்பு இருத்தல்<br>• சாதாரண சித்தி<br>(ஈ) சட்டக் கல்லூரியின் இறுதியாண்டில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறல்<br>• சட்டக் கல்லூரியின் இறுதியாண்டில் இரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெறல்<br>(ஈ) குறிப்பு I : சட்டக்கல்லூரி இறுதித் தேர்வில் விண்ணப்பதாரி சிறப்பு பட்டத்துடன் தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே மேற்குறிப்பிட்ட 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br>குறிப்பு II : உயர் தகைமைக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.</td><td>25<br>20<br>15<br>10<br>07<br>05<br>10<br>05</td><td>25</td></tr>
<tr><td>02.</td><td>மேலதிக அனுபவம் :<br>திறந்த நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் வழக்கில் ஆஜராகுதல்
<table>
<tr><th></th><th>வழக்குகளை பதிவு செய்வதற்கு (ஒரு (வழக்குக்கு)</th><th>நீதிமன்றத்தில் ஆஜராகுதல், கருத்துக்களை முன்வைத்தல் (ஒரு வழக்குக்கு)</th></tr>
<tr><td>உச்ச நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>நியாய சபைகள்</td><td>2</td><td>3</td></tr>
</table>
குறிப்பு : மேற்கூறிய தகுதிகளை நிரூபிப்பதற்காக, வழக்கின் கடைசி விசாரணையின் திகதியுடன் தொடர்புடைய தீர்ப்புகளின் நகல்கள் அல்லது வழக்கு இறுதியாக நடத்தப்பட்ட தினத்துடன் தொடர்புடைய அறிக்கை என்பவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட நகல்களினை நேர்காணல் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.</td><td>35</td><td>35</td></tr>
</table>

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **தகவல் தொழில்நுட்பம் /தகவல் தொழில்நுட்ப சட்டம் பற்றிய அறிவு** | | **10** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்புக்கான முக்கிய பாடமாக தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி அறிவியலைக் கற்றமைக்காக | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரி அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொழில் நிறுவனத்திலிருந்து தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்தில் டிப்ளோமா பட்டம். | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா பட்டம் அல்லது NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் மற்றொரு நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட டிப்ளோமா பட்டம். | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது இலங்கை சட்டக் கல்லூரி அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொழில் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறையில் பாடநெறிகளைக் கற்றதன் பின்பு/பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றமைக்கு சான்றாக பெறப்பட்ட சான்றிதழ்கள். (ஒரு சான்றிதழுக்கு 02 மதிப்பெண்கள் பிரகாரம் அதிகபட்சம் 2 சான்றிதழ்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.)<br><br>**குறிப்பு** : மிக உயர்ந்த தகைமைக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும். | 04 | |
| 04 | **மொழித்தேர்ச்சி :** | | **15** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்ற பட்டம். | 15 | |
| | (ஆ) சர்வதேச /தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட வழக்கு வாதப்போட்டிகளில் (Moot Court Competitions) வெளிப்படுத்தப்படும் ஆங்கில புலமை<br><br>**தனிப்பட்டவர்**<br>(i) முதல் இடம்/சிறந்த திறன் -12<br>(ii) இரண்டாவது இடம் -10<br>(iii) மூன்றாம் இடம் /ஏனைய திறன்கள் -08<br><br>**குழு**<br>(i) முதல் இடம்/சிறந்த திறன் -10<br>(ii) இரண்டாவது இடம் -08<br>(iii) மூன்றாம் இடம் /ஏனைய திறன்கள் -06 | 12 | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 04 | **மொழித்தேர்ச்சி :** *(தொடர்ச்சி)* | | **15** |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கில பாடத்தில் டிப்ளோமா அல்லது NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட நிலையில் ஆங்கிலத்தில் டிப்ளோமா பட்டத்தினை ஏனைய நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றிருத்தல். | 10 | |
| | (ஈ) கல்விப் பொது தராதர உயர் தர தேர்வில் (உள்ளூர் அல்லது இலண்டன்) ஆங்கில பாடத்திற்கு "அதி திறமை சித்தி" தரம் அல்லது IELTS தேர்வில் மொத்த மதிப்பெண் 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL - IBT யில் 79 அல்லது அதற்கு மேல், TOEFL - CBT யில் 213 அல்லது அதற்கு மேல் அல்லது TOEFL - PBT யில் 550 அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கிலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட உயர் சான்றிதழ் அல்லது வேறொரு நிறுவனத்திடமிருந்து ஆங்கிலத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட NVQ நிலை 4 சான்றிதழ். | 05 | |
| | **குறிப்பு :** மிக உயர்ந்த தகைமைக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும். | | |
| 05 | **நேர்காணலில் காட்டப்படும் திறமைகள் :**<br><br>**பதவிக்கான கடமைகளினை நிறைவேற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு இருக்கப்பட வேண்டிய தேவைகள்**<br><br>○ சக்தி சார்ந்த கேள்விகள் (02 புள்ளிகள்)<br>○ நிலைமை சார்ந்த கேள்விகள் (03 புள்ளிகள்) மற்றும்<br>○ நிலைமை சார்ந்த கேள்விகள் (10 புள்ளிகள்)<br>மதிப்பீட்டு வினாக்களுக்கு அளிக்கப்படும் பதில்களின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. | | **15** |
| | **மொத்தம்** | | **100** |

7. **விண்ணப்பதாரர்களினை இனம் காணல்.-** அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே திறன் மதிப்பீட்டு நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் விண்ணப்பதாரரால் முறையாக சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள் என்பன நேர்காணலின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

நேர்காணலின் போது உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

(i) ஆட்களினை பதிவு செய்வதற்காக ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை.-**

(i) விண்ணப்பப் படிவங்களாவன, "செயலாளர், கல்வி அமைச்சு, திறன் அபிவிருத்தி தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு, நிபுநதா பியச, 354/2, அல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு 5" என்ற முகவரிக்கு 2024.04.29 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். முடிவுத் திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய மாதிரி விண்ணப்பப்படிவம் இந்த அறிவிப்பின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவு தாளில் தயாரித்து முதல் பக்கம் 01 முதல் 03 வரையிலும், இரண்டாவது பக்கம் 04 முதல் 06 வரையிலும், மூன்றாவது பக்கம் 07 முதல் 08 வரையிலும் தயார் செய்து தங்களது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்ய வேண்டும்.

(iii) விண்ணப்பம் இடப்பட்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு" எனக் குறிக்கப்படல் வேண்டும்.

(iv) விண்ணபத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது ஒரு அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் /சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/வழக்கறிஞர் / பிரபல நொத்தாரிசு/முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியில் இருப்பவரும் ரூபா 47,615.00 அல்லது அதற்கு மேல் ஒருங்கிணைந்த மாதாந்த வருமானத்தினை பெறும் அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தாங்கள் பணிபுரியும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மாதிரிக்கு அமையாத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். தொலைந்த அல்லது தாமதமான விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **தவறான தகவல்களை வழங்குதல்.**- ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு முன் நீங்கள் அனுப்பிய விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை அல்லது போலியானவை என கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்பு இதுபோன்ற தவறான அல்லது போலியான தகவல்கள் முன்வைக்கப்பட்டமை கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு பணியாளர் பணிநீக்கம் செய்யப்படுவார்.

10. பணியிடங்களை நிரப்பவோ அல்லது வெற்றிடமாக விடவோ அரசாங்க சேவைகள் ஆணக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் இணக்கம் அல்லது வேறுபாடு இருந்தால் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்கும்.

12. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் அல்லது இந்த ஆட்சேர்ப்பு செயல்முறையின் போது ஏதேனும் சிக்கல் சூழ்நிலை ஏற்பட்டால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு எடுக்கும் முடிவுகள் இறுதியானதாக இருக்கும்.

அரசாங்க சேவைகள் ஆணக்குழுவின் உத்தரவின் பிரகாரம்,

வசந்தா பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு,
நிபுனதா பியச,
354/2, எல்விட்டிகல மாவத்தை,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 5,
2024, மாச்சு 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## கல்வி அமைச்சின் திறன் மேம்பாடு, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு

| நேர்க்காணலுக்கு தோற்றும் மொழி மூலம் | |
|---|---|

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக.)
சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4)

(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

(**குறிப்பு** : விண்ணப்பிக்கப்பட்ட மொழி மூலம் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.)

1.0 1.1 முழுப்பெயர் (திரு. /திருமதி/செல்வி) : ......................................................
(தமிழில் /சிங்களத்தில்)

1.2 முழுப் பெயர் :......................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு. /திருமதி/செல்வி) : ......................................................

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : ......................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.0 2.1 நிரந்தர வதிவிட முகவரி : ......................................................

2.2 தொலைபேசி இலக்கம் : ......................................................

3.0 3.1 பால் : ஆண் 0 ☐ (உரிய கூட்டினுள் எழுதுக)
பெண் 1 ☐

3.2 விவாக நிலை : திருமணமானவர் 1 ☐ (உரிய கூட்டினுள் எழுதுக)
திருமணமாகாதவர் 0 ☐

3.3 பிறந்த திகதி : வருடம் :...................... மாதம் :........................ திகதி :...............

3.4 2024.04.29 ஆந் திகதிக்கு உள்ளவாறான வயது : வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1 நேர்காணலுக்கான விண்ணப்பத்துடன் தொடர்புடைய அறிவித்தலுக்கு அமைவுற பெற்றுக்கொண்ட தகைமைகள்:

| தகைமை | பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|---|
| ....................... | ...................................... | ...................................................... |
| ....................... | ...................................... | ...................................................... |

4.2 உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப் பிரமாணம் செய்த திகதி :......................................................

4.3 விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுக்கும் அறிவிப்பில் இலக்கம் 06 இன் கீழ் கோரப்பட்டுள்ள ஒவ்வொரு தகுதியையும் பெறுவது தொடர்பான விவரங்கள் :

| தகைமைகள் | பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி/காலவரையறை |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | | |
| ........................ | ........................................ | ...................................................... |
| ........................ | ...................................... | ...................................................... |

2. மேலதிக தொழில்சார் அனுபவம்
....................... ......................................... .........................................................................
....................... ....................................... .........................................................................

3. தகவல் தொழில்நுட்ப அறிவு
....................... ......................................... .........................................................................

4. மொழித் தேர்ச்சி :
....................... ......................................... .........................................................................

5.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றத்துக்காக நீதிமன்றத்தினால் ஒரு குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீர்களா?

உரிய கூட்டினுள் குறியிடுக. ("ஆம்" எனில் காரணங்கள் தருக)

| இல்லை | | | ஆம் | |
|---|---|---|---|---|

6.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் அளித்துள்ள தகவல்கள் உண்மையானவை, சரியானவை என்றும், அனைத்து பிரிவுகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும், நான் கூறிய இந்தக் கூற்று தவறானது எனக் கண்டறியப்பட்டால், நியமனத்திற்கு முன் தகுதி நீக்கம் செய்யப்பட்டு, பணிநீக்கம் செய்யப்படுவேன் என்பதை அறிவேன் என்றும், நியமனத்திற்குப் பிறகு நான் அனைத்து விதிகளுக்கும் கீழ்ப்படிவேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

............................
திகதி :....................... விண்ணப்பதாரியின் கையொப்பம்.

7.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தினை முனவைத்த திரு./திருமதி/செல்வி ............................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் தனது கையொப்பத்தினை எனது முன்னிலையில் இட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

............................
உறுதிப்படுத்தும் அலுவலரின்
கையொப்பம்.

முழுப்பெயர் :...........................
பதவி :......................................
திகதி :......................................
(உத்தியோகபூர்வ முத்திரை)

8.0 **திணைக்களத் தலைவரின் பரிந்துரை (அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமே உரித்துடையது) :**

திரு./திருமதி/செல்வி ................................. என்பவர் இந்த நிறுவனத்தில் பணிபுரிகிறார் எனவும், அவரால் வழங்கப்பட்ட தகவல்கள் சரியானது எனவும், அவரது பணி மற்றும் வருகை என்பன திருப்திகரமாக உள்ளது எனவும் மற்றும் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் அல்லது ஒழுங்கு நடவடிக்கை எதுவும் நிலுவையில் இல்லை எனவும், நான் உறுதிப்படுத்துவதுடன், இந்த பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கப்படலாம் என்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

............................
திணைக்களத் தலைவரின்/நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.

பெயர் :......................................
பதவி :......................................
விலாசம் :......................................
திகதி :......................................
(உத்தியோகபூர்வ முத்திரை)

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் சட்ட அலுவலர் (நிறைவேற்று அலுவலர் வகுதியின் IIIஆம் தரம்) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024

வனவியல் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்படும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் நிறைவேற்றுசேவை வகுதியின் தரம் III இன் சட்ட அலுவலர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு திட்டம் :** அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும், தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் கூடிய புள்ளிகளை பெறும் விண்ணப்பதாரி வெற்றிடத்துக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (06 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கல் நடைமுறைக்கு அமைவாக தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் அமுல்படுத்தும் திகதி அரசாங்க சேவைகள்ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள்**

(i) **கல்வி/தொழில் தகைமைகள் :**

இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

(ii) **அனுபவம் :**

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் சட்டத்தரணியாக மூன்று (03) ஆண்டுகளுக்கு குறையாத காலம் வினைத்திறனான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (வினைத்திறனான தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்றுள்ள காலம், பதவி முத்திரை மற்றும் சான்றுப்படுத்திய திகதி தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்றில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறை தொடர்பான பதவியில் *மூன்று(03) வருடங்களுக்குக் குறையாத, அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(செயலாளர்/திணைக்களம்/நிறுவனத் தலைவரால் வழங்கப்பட்ட கடிதம் மூலம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

**குறிப்பு**: அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களை விண்ணப்பதாரியே சான்றுப்படுத்தி, பிரதிகளை விண்ணப்பப்படிவத்தில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சேவைக்காலம் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் திகதி தெளிவாக குறிப்பிடப்பட்ட சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் அறிவிப்புகளின்றி நிராகரிக்கப்படும்.

* சட்டத்துறை சார்ந்த பதவி என்பது சட்டம் தொடர்பான பட்டம் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல், ஆட்சேர்ப்புச் செய்கின்ற அடிப்படை தகைமைகளுடன் கூடிய பதவிகளாகும்.

(iii) **உடற் தகுதி :**

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள தகைமை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) **ஏனைய தகுதிகள் :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளை அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். உங்களுக்கு உரித்தாகும் ஓய்வூதிய திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் விதிமுறைக்கேற்ப நீங்கள் அதற்கான பங்களிப்புப் பணத்தை செலுத்த வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டு நன்னடத்தை காலத்துக்கு உட்பட்டதாகும். பதவியில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு அமைவாக முதலாவது வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், உரிய ஏனைய அரசகரும மொழியில் /அரசகரும மொழிகளில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கும் மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன், நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமை பெற்ற மொழிமூலம் யாதெனில், நீங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலமாகும்.

4. **வயதெல்லை:** விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் 21 வயதுக்கு குறையாதிருக்க வேண்டும் என்பதுடன், 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்:** 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை 1 இன் படி இப் பதவிக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 47,615.00 - 10 × 1335 – 8 × 1630 - 17 × 2170 - ரூபா 110,895.00 (SL– 1-2016) ஆகும்.

6. தகைமை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்படும் புள்ளி வழங்கும் முறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | **25** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டத் துறை தொடர்பான பட்டப் பின் படிப்பு பட்டம் | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டத் துறை தொடர்பான பட்டப் பின் படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டத் துறை தொடர்பான பல்கலைக்கழகத்தில் உயர் சட்ட கல்வி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட பட்டநிலை பின்படிப்பு தொடர்பான சட்டத்துறை டிப்ளோமா | 20 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட, | | |
| | • முதலாம் வகுப்பு சித்தியுடன் கூடிய சட்டத்துறையின் இளமாணி பட்டம் | 15 | |
| | • இரண்டாம் வகுப்பு உயர் சித்தியுடன் கூடிய சட்டத்துறையின் இளமாணி பட்டம் | 10 | |
| | • வகுப்பு சித்தியுடன் கூடிய சட்டத்துறையின் இளமாணி பட்டம் | 07 | |
| | • பொது சித்தியுடன் கூடிய சட்டத்துறையின் இளமாணி பட்டம் | 05 | |

<table>
<tr><th>தொடர் இலக்கம்</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>அதிகூடிய புள்ளிகள்</th></tr>
<tr><td></td><td>(ஈ) சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பின் சித்தி<br>சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்பின் சித்தி<br>குறிப்பு : I சட்டக் கல்லூரியில் இறுதிப் பரீட்சையில் சிறப்பு சித்தியுடன் சித்தியடைந்திருந்தால் மட்டும் மேற்படி 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br>குறிப்பு : II அதிகூடிய தகைமை பொருட்டு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்.</td><td>10<br>05</td><td></td></tr>
<tr><td>02.</td><td>மேலதிக தொழில்சார் அனுபவம் :<br>வழக்குகளுக்கு ஏற்புடையதான ஆவணங்களை தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் விளக்கமளித்தல்<br>
<table>
<tr><th></th><th>வழக்கு தொடருதல் (ஒரு வழக்கு பொருட்டு)</th><th>நீதிமன்றத்தின் முன் தோன்றி விளக்கமளித்தலுக்கான புள்ளிகள் (ஒரு வழக்கு பொருட்டு)</th></tr>
<tr><td>உயர் நீதிமன்றம் (Supreme court)</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>மேல் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>நியாய அதிகார சபைகள்</td><td>2</td><td>3</td></tr>
</table>
குறிப்பு : மேற்படி தகைமைகளை உறுதிப்படுத்வதற்காக ஏற்புடைய வழக்கு தீர்ப்புகளின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு நடைபெற்ற திகதியின் வழக்கு அறிக்கையின் சான்றுப்படுத்திய பிரதியொன்றை நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.</td><td></td><td>35</td></tr>
<tr><td>03.</td><td>தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான அறிவு<br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் பொருட்டு தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானம் பிரதான பாடமாக கற்றிருத்தல்<br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் அல்லது வேறு அரச அங்கீகாரம் பெற்ற தொழில்சார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான டிப்ளோமா<br>(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா அல்லது வேறு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான NVQ 5 அல்லது அதற்கு கூடிய மட்டத்திலான டிப்ளோமா<br>(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கை சட்டக் கல்லூரி அல்லது வேறு அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறையில் பாடநெறி கற்று/பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றி பெற்றுக்கொண்ட சான்றிதழ் (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் என்ற வகையில் ஆகக் கூடியதாக இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.)<br>குறிப்பு : ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்.</td><td>10<br>08<br>05<br>04</td><td>10</td></tr>
</table>

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 04. | **மொழித் திறமை** | | **15** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழியை பிரதான பாடமாக உள்ளடக்கப்பட்டு பெற்றுக் கொண்ட பட்டம் | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் மாதிரி நீதிமன்ற போட்டிகளில் (Moot court competitions) குறிப்பிடப்பட்டுள்ள ஆங்கில மொழி வெளிப்படுத்தும் தன்மை<br><br>**ஒற்றையர் போட்டிகள்**<br>(i) முதலாவது இடம்/சிறந்த ஆற்றல் -12<br>(ii) இரண்டாவது இடம் -10<br>(iii) மூன்றாவது இடம் /ஏனைய ஆற்றல்கள் -08<br><br>**குழு**<br>(i) முதலாவது இடம்/சிறந்த ஆற்றல் -10<br>(ii) இரண்டாவது இடம் -08<br>(iii) மூன்றாவது இடம் /ஏனைய ஆற்றல்கள் -06 | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழிக்கு பெற்றுக்கொண்ட டிப்ளோமா அல்லது வேறு ஒரு நிறுவனத்தில் ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொண்ட SLQF 3 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தின் டிப்ளோமா அல்லது அரச பயிற்சி நிறுவனமொன்றில்/ அரச பயிற்சி நிறுவனத்திற்கு இணைந்துள்ள நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 1500 கற்கை மணித்தியாலங்களைக் கொண்ட கற்கைநெறியைக் கற்று பெற்றுக்கொண்டுள்ள ஆங்கில மொழிக்கான டிப்ளோமா | 05 | |
| | (ஈ) கல்வி பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது லண்டன்) ஆங்கில மொழிக்கு ஆகக் குறைந்தது அதிதிறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது IELTS மொத்த புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு கூடிய,TOEFL – IBT 79 அல்லது அதற்கு மேற்பட்ட,TOEFL – CBT 213 அல்லது அதற்கு மேற்பட்ட TOEFL – PBT 550 அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழிக்கு பெற்றுக்கொண்ட உயர் கல்விச் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனமொன்றில் ஆங்கில மொழிக்கு பெற்றுக்கொண்ட SLQF 2 மட்டத்திலான சான்றிதழ் | 05 | |
| | **குறிப்பு :**<br>(ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 05. | **நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமை**<br>பதவியில் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஆதாரமாக அமையும் விண்ணபத்தாரியின்<br>• ஆற்றல் (Strength questions) (இரண்டு புள்ளிகள் 02)<br>• சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் (Situational Questions) (03 புள்ளிகள்) மற்றும்<br>• திறமை(Competency questions) (10 புள்ளிகள்)<br>மதிப்பீட்டுக்கு உட்படுத்தலை நோக்கமாகக்கொண்டு வினாக்களுக்கு வழங்கும் பதிலுக்கமைவாக புள்ளிகள் வழங்கப்படும் | | 15 |
| | **மொத்தம்** | | **100** |

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**: அனைத்து வகையிலும் பூரணமான விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்த வர்கள் மட்டும் தகைமை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளையும்,விண்ணப்பதாரியினாலேயே உரியவாறு சாற்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்க வேண்டிய முறை:**

(i) விண்ணப்பப்படிவம் 2024.04.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "வனப் பாதுகாப்பு நாயகம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், சம்பத்பாய, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு கிடைக்ககூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அன்றைய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பப்படிவத்தை A4 அளவிலான தாளில் தயாரித்து முன் பக்கத்தில் இலக்கம் 01 தொடக்கம் 03 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 3.4 தொடக்கம் 8.0 வரையிலும், மூன்றாம் பக்கம் இலக்கம் 9.0 தொடக்கம் 11.0 வரையிலும் அமையும் வகையில் தயாரித்து,தமது கையெழுத்தில் பூரணப்படுத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தை உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் தரம் III இன் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/பிரசித்தி பெற்ற நொத்தாரிசு/ முப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது ரூபா 47,615.00 ஐ அல்லது அதற்கு கூடுதலான மாதாந்த திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பத்தை தாம் சேவையாற்றும் திணைக்களத்தின், திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(vi) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மாதிரிக்கு அமைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்.**- உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் ஏதேனுமொரு தகவல் பொய்யானதென அல்லது தவறானதென ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் தெரிய வந்தால் உங்களதுவிண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தன்மை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்னர் தெரியவந்தால் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு அமைவாக சேவையிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

11. இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி வாசகங்களுக்கு இடையில் ஏதாவது ஒத்துவராமை அல்லது முரண்பாடுகள் ஏற்பட்டால், அதன் போது சிங்கள மொழி வாசகம் வலுவுள்ளதாக இருக்கும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்பு செயன்முறையில் ஏதாவது முரண்பாடான நிலை ஏற்பட்டால் அது தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

அரசாங்க சேவைகள் ஆணக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
வனவியல் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு.

2024, மாச்சு மாதம் 28.

03-481

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

## இலங்கை மதுவரித் திணைக்களம்

மதுவரிக் காவலர் சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிக் காவலர் சாரதி பதவியில் நிலவும் 15 வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2373 ஆம் இலக்க வர்த்தமானியில் 2024.02.22 ஆந் திகதி வெளியிடப்பட்ட விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதியானது 2024.03.28 இலிருந்து 2024.04.17 ஆந் திகதி வரை இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

02. அதற்கிணங்க, மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் 2024.04.17 அன்று தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மேற்கூறிய பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

எம். ஜே. குணசிறி,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

2024, மாச்சு 28.

03-464

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.